# ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் இவர்கள்



எ.த.ஜெயரஞ்சித்
எஸ்.ஏ.ஸ்ரீதர்



அம்ரிதா பதிப்பகம்

# உள்ளே


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | I |
| அணிந்துரை | II |
| 01. அ.வரத பண்டிதர் | 01 |
| 02. பதுறுத்தீன் புலவர் | 02 |
| 03. உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் | 03 |
| 04. நவாலியூர் சோமசுந்தரப்புலவர் | 04 |
| 05. புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை | 06 |
| 06. F.X.C. நடராசா | 07 |
| 07. கனக - செந்திநாதன் | 08 |
| 08. அ.செ.முருகானந்தன் | 10 |
| 09. எஸ்.அகஸ்தியர் | 11 |
| 10. பேராசிரியர் நந்தி | 13 |
| 11. மூதறிஞர் சொக்கன் | 14 |
| 12. நீலாவணன் | 16 |
| 13. சில்லையூர் செல்வராசன் | 18 |
| 14. மு.தளையசிங்கம் | 19 |
| 15. செம்பியன் செல்வன் | 21 |

# உசாவியவை

## நூல்கள்:


- சதாசிவம்,ஆ. - ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், சாகித்திய மண்டலம், கொழும்பு, 1966.
- சதாசிவம்பிள்ளை,ஆ. - பாவலர் சரித்திர தீபகம், பாகம்- I,II, கொழும்புத் தமிழ்ச் சங்கம், 1975.
- சிவலிங்கராஜா,எஸ். - ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறிகள், குமரன் புத்தக இல்லம்,கொழும்பு-சென்னை, 2003.
- துரைசிங்கம்,த. - ஈழத்து தமிழிலக்கிய வரலாறு, உமா பதிப்பகம், கொழும்பு, 2004.
- மனோகரன்,துரை. - இலங்கையில் தமிழிலக்கிய வளர்ச்சி, கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம்-கண்டி, 1997.
- மதிவதனன்,தி. - ஈழத்துத் தமிழிலக்கிய வரலாறு, யாழ்.சுழிபுரம், 2003.
- துரைசிங்கம்,த. – பைந்தமிழ் வளர்த்த ஈழத்துப் பாவலர்கள், உமா பதிப்பகம், கொழும்பு, 2005.
- மௌனகுரு,சி. – கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன், சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை, 1994.
- பத்மகுமார்,சா. - இலங்கைப் பெரியார்களின் தமிழியற் பணிகள், நியூ ஹிமாலயா கல்வி நிறுவனம், களுவாஞ்சிகுடி, 2002.
- இக்பால்,ஏ. - இலக்கிய ஊற்று, பேசும் பேனா வெளியீடு, அக்கரைப்பற்று, 1996.
- தவமணிதேவி,சா. – மகாவித்துவான் F.X.C.நடராசா – ஆக்கங்கள் - தேர்ந்த நூல் விபரப்பட்டியல், புனித வளனார் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு, 1991.
- மொஹிடீன் ரஜா- க.பொ.த.(உ/த) மாதிரி வினாப்பத்திரங்கள் வினா விடைகளுடன், ஆதவன் பதிப்பகம், கொழும்பு, 2002.
- இராமசாமிப் புலவர்,சு.அ. – தமிழ்ப் புலவர் வரிசை (பகுதி-4), திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.1968.
- செந்திநாதன்.கனக.- ஈழத்து இலக்கிய வளர்ச்சி, அரசு வெளியீடு, கொழும்பு, 1964.
- செங்கை ஆழியான் (தொகுப்பு) - ஈழத்து முன்னோடிச் சிறுகதைகள், பூபாலசிங்கம் பதிப்பகம், கொழும்பு, 2001.
- நந்தி- தரிசனம் (சிறுகதைத் தொகுப்பு), குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை, 2002.
- புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை, ஏ.- உள்ளதும் நல்லதும், புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை நினைவுப்பணி மன்றம், மட்டக்களப்பு, 1982.
- தெளிவத்தை ஜோஸப்- உழைக்கப் பிறந்தவர்கள் (மலையகச் சிறுகதைகளின் இரண்டாவது தொகுதி), துரைவி பதிப்பகம், கொழும்பு, 1997.
- மௌனகுரு,சி., சித்திரலேகா,மௌ., நுஹ்மான்,எம்.ஏ.-இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம், வாசகர் சங்கம், கல்முனை, 1979.
- Selvarajajah,S.J.- Batticaloa Bikiliography, Municipal Council, Batticaloa, 1989.


**பத்திரிகைகள்:** வீரகேசரி, தினகரன், தினக்குரல்.

**இதழ்கள்:** மல்லிகை, ஞானம், மாருதம், படி, புதிய தரிசனம், தெரிதல்.

## இணையத் தளங்கள்:

- பதிவுகள்- www.pathivukal.com
- திண்ணை- www.thinnai.com
- இலக்கியப் பெட்டகம் - www.neelaavanan.com
- நூலகம் - www.noolaham.net
- மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம் - www.project-madurai.com
- ஈழநாதம் - www.eelanaatham.com

☺ 😐 ☹

# முன்னுரை

'ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியில் இவர்கள்' எனும் இந்நூல் க.பொ.த. உயர்தரத்தில் தமிழை ஒரு பாடமாகப் பயிலும் மாணவர்களுக்கும் - ஈழத்தின் இலக்கிய கர்த்தாக்கள் குறித்த தேடலுள்ள இலக்கிய ஆர்வலர்களுக்கும் பயன்படும் வகையிலும் 'ஒல்லாந்தர் காலம் முதல் கி.பி. 2005 வரையான காலப்பகுதியில் ஈழத்தில் வாழ்ந்து தமிழிலக்கிய வளர்ச்சியில் பங்களிப்புச் செய்துள்ள புலவர்களும் படைப்பாளிகளுமாகவுள்ள பதினைந்து பேரினது வாழ்க்கை — அவர்தம் பணிகள் - ஈழத்துத் தமிழிலக்கியத்தில் அவர்களின் வகிபாகம் போன்றவற்றை மிகச் சுருக்கமான முறையில் கூறுவதாக அமைகிறது.

தற்போது ஈழத்து தமிழிலக்கிய உலகில் தமிழ்ப் படைப்பாளிகள் பற்றிய முழுமையான தகவல்களைக் கொண்ட நூல்களைக் காண்பதென்பது மிகவும் அரிது. இருப்பினும் சைமன் காசிச்செட்டி, ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளை, அ.குமாரசுவாமிப் புலவர் போன்றோர் புலவர்கள் பற்றி எழுதுகிறபோது எத்தகைய சிரமங்களை எதிர் கொண்டிருப்பர் என்பதை இச்சிறுநூலை ஆக்கும் முயற்சியில் ஈடுபட்ட நாம் இதற்கான தகவல்களைப் பெறுவதற்கான தேடலின் போது உணர்ந்து கொண்டோம்.

கிடைத்த தகவல்களைக் கொண்டு மாணவர்க்கேற்ற வகையில் சுருக்கமாக அமைக்கப்பெற்றுள்ள இந்நூல் பல குறைபாடுகளுடனேயே உங்கள் கைகளில் தவழ்கிறது. இருப்பினும் எதிர்வருகின்ற காலங்களில் இதுபோன்ற நூல்களை நாம் ஆக்குவதற்கு இந்நூலில் உள்ள குறைகளையும் சுட்டிக் காட்டி ஈழத்தின் புலவர்கள்-படைப்பாளி கள் பற்றிய தகவல்கள், அரிய நூல்கள், இதழ்கள், புகைப்படங்கள் போன்றவற்றை வைத்திருப்போர், எமக்கு அனுப்பி உதவுவார்களாயின் ஈழத்து தமிழிலக்கிய படைப்பாளிகளது பணிகள் குறித்த முழுமையான நூல்கள் வெளிவருவதற்கு ஏதுவாய் இருக்கும்.

இந்நூலினை வெளிக்கொணர்வதற்கு தன்னுடைய முழுமையான ஆலோசனையையும் விருப்பத்தினையும் வெளிப்படுத்தி அழகியதொரு அணிந்துரையையும் தந்துதவிய கலாநிதி செ.யோகராசா அவர்களுக்கும் சில அரிய நூல்களையும் - சில புகைப்படங்க ளையும் பெறுவதற்கு உதவிய அக்ஷித்தா கொமினிகேசன் உரிமையாளர் க.ஜெகதீஸ்வரன் அவர்களுக்கும் இவற்றிற்கும் மேலாக இவ்வாறானதொரு நூலின் தேவையினை எமக்கு உணரவைத்து விரைவாக இந்நூலினை நாம் வெளிக்கொணர்வதற்கு மிக முக்கிய மானவர்களாக விளங்கும் எமது அன்புக்குரிய மாணவர்களுக்கும் மனம் விரும்பிய நன்றிகள்.

எ.த.ஜெயரஞ்சித்,
எஸ்.ஏ.ஸ்ரீதர்.

வாழைச்சேனை.
19.04.2006

# அணிந்துரை

கலாநிதி செ.யோகராசா,
மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை,
மட்டக்களப்பு.
19.04.2006

ஈழத்துத் தமிழிலக்கியம் பற்றிய ஆய்வுகளை அவை எத்துறை சார்ந்ததாயினும் ஓரளவாவது திருப்தி தரக்கூடிய விதத்தில் செய்வதென்பது இயலாததொன்று. ஏனெனில், காலத்தினால் முற்பட்டவர்களாயினும் சரி, சமகாலத்தவராயினும் சரி புலவர்கள், படைப்பாளிகள் பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்கள், இலக்கிய முயற்சிகள் சார்ந்த விவரங்கள் பற்றிய அடிப்படைத் தகவல்களைப் பெறுவதென்பது மிகக் கடினமானது. அவற்றைப் பெறுவதற்கேற்ற நூலக வசதிகள் எம்மிடமில்லை. அவை பற்றிய கைந்நூல்கள், நூல் விபரப்பட்டியல்களும் இல்லை. அவற்றின் முக்கியத்துவத்தைக் கூட நாம் உணர்ந்திருக்கவில்லை.

உங்கள் கரங்களில் உள்ள இச்சிறுநூல், க.பொ.த. உயர்தரப் பரீட்சைத் தேவைக்காக எழுதப்பட்டிருப்பினும் மேற்குறிப்பிட்ட பின்னணியில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது என்று துணிந்து கூறுவேன்.

சமகாலப் படைப்பாளிகளின் வாழ்க்கை பற்றியோ அவர்களின் முகங்கள் பற்றியோ அறியாமலும் அவர்களது நூல்களை வாசிக்காமலும் (சங்க இலக்கிய நூல்களைத் தொட்டுப் பாராமலும்) சிறந்த பெறுபேற்றினை அடைந்து விடுகின்ற இன்றைய உயர்கல்விச் சூழலில், இந்நூலாசிரியர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் படைப்பாளிகளின் புகைப்படங்களைத் தேடி வெளியிட்டிருப்பதும் அவர்களது காலத்தைக் குறிப்பிட்டிருப்பதும் பாராட்டிற்குரிய விடயங்களாகின்றன!

'இலங்கையர்கோனின் தமிழ்ப்பணி' என்று கேட்கின்ற போது இலங்கையர்கோன் எனப்பட்ட 'இராவணனது இசைப்பணி' பற்றி எழுதப்பட்டு வருகின்ற இன்றைய அவலச் சூழலில் மென்மேலும் செம்மையுடன் இவ்வாறான நூல்களை இந்நூலாசிரியர்கள் தொடர்ந்தும் தரவேண்டும் என்பதே எனது ஆதங்கமாகும்.

# அ.வரத பண்டிதர்
## (1656-1716)

யாழ்.சுன்னாகத்தைச் சேர்ந்த இவர் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த இலக்கியவாதிகளுள் குறிப்பிடத்தக்கவர். 'வரத கவிராயர்', 'வரதராச கவிராசர்', 'வரதராச பண்டிதர்' போன்ற பல பெயர்களால் அழைக்கப்பட்டவர்.

'அமுதாகரம்', 'சிவராத்திரி புராணம்', 'ஏகாதசி புராணம்', 'பிள்ளையார் புராணம்', 'பிள்ளையார் கதை', 'குருநாதசுவாமி பிள்ளைவிடு தூது', 'கணேச விற்கோட்ட விநாயகர் ஊஞ்சல்' முதலிய இலக்கியங்களை எழுதியுள்ளார்.

சிவராத்திரி விரதத்தின் சரித்திரம், அவ்விரதம் அனுட்டிக்கும் முறை, அனுட்டிப்பதால் அடையும் பயன், இவ்விரதத்தை அனுட்டித்து நற்கதி அடைந்தோரின் வரலாறு முதலிய வற்றை எடுத்துக் கூறுவதே 'சிவராத்திரி புராணம்' ஆகும். இன்றும் இந்துக் களால் போற்றப்படும் நூலான இது காப்பு, கடவுள் வாழ்த்து, பாயிரம் என ஒன்பது சருக்கங்களையும் 691 செய்யுட்களையும் உடையதாகும். கி.பி.18 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் எழுதப்பட்டதாக கருதப்படும் இது சிதம்பரத்தில் உள்ள பலரின் வேண்டுகோளுக்கிணங்க பாடப்பட்ட மொழி வளமுள்ள இலக்கியமாகத் திகழ்கிறது.

திருமால் விரதமாகிய 'ஏகாதசி' விரதத்தின் வரலாறு, அது அனுட்டிக்கும் முறை, பயன் என்பவற்றை காப்பு, கடவுள் வாழ்த்து, அவையடக்கம், பாயிரம் என்பவற்றுடன் மூன்று சருக்கங்களையும் 258 விருத்தப் பாக்களையும் கொண்டு அமைந்ததே 'ஏகாதசி புராணம்' ஆகும்.

பிள்ளையார் புராண'மும் 'பிள்ளையார் கதை'யும் ஆவணிச் சதுர்த்தி, மார்கழிச் சஷ்டி (பிள்ளையார் பெருங்கதை விரதம்) முதலிய விரதங்கள் பற்றி கூறுகின்றன. விநாயகர் வரலாறு, கயமுகனை அழித்து மூசிகனை வாகனமாகக் கொண்டமை, விரத அனுட்டிப்பு முறை, அதன் மகிமையையும் கூறும் வகையில் அகவல் யாப்பினால் பாடப்பட்டதாகும். இங்கு பிள்ளையார் புராணம் புராண படன முறையையும் பிள்ளையார் கதை பாராயண மரபினையும் கருத்தில் கொண்டு எழுதப்பட்டதென்பர்.

"சைவ மக்களால் பெரிதும் அனுட்டிக்கப்படும் விரதங்களான பெருங்கதை விரதம், சிவராத்திரி விரதம், ஏகாதசி விரதம் போன்ற வற்றைத் தேர்ந்தெடுத்து அவ்விரதங் களின் மகிமைகளை விளக்கும் வகையில் வரதபண்டிதர் புராணங்கள் படைத்தமை அவர் மீது சைவ மக்கள் பெருமதிப்புக்கொள்ளக் காரணமாயிற்று" என்று த.துரைசிங்கம் கூறுவதும் இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும்.

காங்கேசன்துறையில் கண்ணியவளை என்னும் இடத்தில் எழுந்தருளியுள்ள குருநாத சுவாமி மீது பாடப்பட்ட பிரபந்தமே 'குருநாதசுவாமி கிள்ளை விடு தூது' ஆகும். இது காப்பு, அவையடக்கம், உள்ளிட்ட கலி வெண்பாவாலான 216 கண்ணி களையும் கொண்டு தூதுப் பிரபந்த மரபிற்கமைவாக பாடப்பட்டதாகும்.

விஷக்கடி முதலானவற்றுக்கு மருந்து உரைக்கும் நூலே 'அமுதாகரம்' என்னும் அறிவியல் நூலாகும். இலங்கையின் மருத்துவ பாரம் பரியத்தை விளக்கி நிற்கும் இந்நூலில், பரம்பரையாக நிலவி வந்த விஷக்கடி வைத்திய முறைகள் பற்றி அறிந்து கொள்ள முடியும். பாயிரம் நீங்கலாக 324 விருத்தங்களைக் கொண்ட இது 'சித்தராரூடம்' எனும் வடமொழி நூலைத் தழுவியே எழுதப்பட்டுள்ளது என்பர்.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் இயற்றப்பட்ட செகராசசேகரம், பரராச சேகரம் ஆகியன விஷ வைத்தியம் பற்றிக் கூறாமையைக் கருத்தில் கொண்டு அக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது என்பர்.

தமிழ் இலக்கிய இலக்கணப் புலமையும் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் வைத்தியம், சோதிடம், வாகடம் எனும் அறிவியலிலும் வரத பண்டிதர் வல்லவராய் விளங்கினார் என்பது அவர்தம் நூல்களால் அறிய முடிகிறது.

❀❀❀

# யாழ்ப்பாணம் பதுறுத்தீன் புலவர்
## (19ஆம் நூற்றாண்டு)

கி.பி.19 ஆம் நூற்றாண்டின் முற் பகுதியில் வாழ்ந்த இஸ்லாமியப் புலவர்களுள் ஒருவரான இவர் தமிழகத்தில் பிறந்து யாழ்ப்பாணத்தில் வதிந்தவராவார்.

யாழ்ப்பாணத்திலேயே கல்வி கற்று தமிழ் இலக்கிய இலக்கணங்களில் ஆழ்ந்த புலமையும் அறிவும் கொண்ட மகாவித்துவானாக விளங்கினார்.

இஸ்லாமிய சமயச் சார்பு இலக்கியங்களில் குறிப்பாக இஸ்லா மியக் காப்பியங்களுள் 'புதுகுஷ்ஷா', 'சீறாப்புராணம்' போன்றவற்றிற்கு அடுத்தபடியாய் விளங்கும் 'முகியித்தீன் புராணத்தை இயற்றி இஸ்லாமிய இலக்கியத்தில் தனக்கென ஓரிடம் பெற்றுள்ள இவர் அக்காலத்திலே தமிழ் நாட்டறிஞர்களால் போற்றிப் புகழப்பட்ட வராகத் திகழ்ந்தார்.

முகையித்தீன் ஆண்டகை அவர்க ளின் வாழ்க்கையை பொருளாகக் கொண்ட முகியித்தீன் புராணம் இரண்டு பாகங்களைக் கொண்டதாக விளங்கு கிறது. முதலாவது பாகம் 40 படலங்க ளையும் 2162 விருத்தங்களையும் இரண்டாவது பாகம் 34 படலங்களும் 1821 விருத்தங்களையும் கொண்டு மொத்தம் 74 படலங்களையும் 3983 விருத்தங்களையும் கொண்டதாக அமையப் பெற்றுள்ளது.

திருநபியின் பேரரான ஆத்மீக ஞானி அப்துல் காதீர் ஜிலானி அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு விளங்கும் இக்காப்பியத்தில் அவர்தம் தலைமுறை, அவரின் அவதாரம், கல்விக்காகச் செய்த பிரயாணம், ஹஜ் யாத்திரை, திருமணம் என்பவற்றோடு யாழ்ப்பாண இயற்கை வளம், நானில வர்ணனைகள் இஸ்லாமிய ஒழுக்க சிந்தனைகள், கற்பனை வளமும் பல்வகை அணிநலன்களும் பொருந்த அமையப் பெற்ற இது இலங்கையில் தோன்றிய முதலாவது இஸ்லாமியக் காப்பிய மாகவும் கருதப்படுகிறது.

1816 இல் அரங்கேற்றப்பெற்ற இந்நூல் 1848 இன் பின்னர் அச்சிடப் பெற்றுள்ளது.

பின்னர் இதனை சதாவதானி கோட்டாறு செய்குத்தம்பிப் பாவலர் அவர்கள் புராணத்தின் முதற் பாகத்தை 1901 இலும் இரண்டாம் பாகத்தை 1903 இலும் பரிசோதித்துப் பதிப்பித்துள்ளார்.

இந்நூல் முழுவதிலும் புலவரின் கவித்துவச் சிறப்பினைக் காணலாம். ஆற்றொழுக்குப் போன்ற நடை, யாழ்ப்பாணத்திற்குரிய பல சொற் பிரயோகம், சொற்றொடர், கற்பனைத் திறன் என புலவரது கவியாற்றல்கள் இந்நூலின் மூலமாக வெளிப் படுகின்றன.

இந்நூலை பதிப்பித்த செய்குத் தம்பிப் பாவலர் அவர்கள் புலவரைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "எல்லா வகையான நூல்களையும் கற்றுத் தெளிந்தவர் - திறமை கொண்ட புலவராக இருந்தவர் - இலகுவாக கவிபாடுபவர் - கவிதையில் விடை கூறுபவர் - அக்காலத்து அரசர்களி டத்தில் பெரு மதிப்புப் பெற்றிருந்தவர்"

இப்புராணத்தை இயற்ற புலவருக்கு உதவி செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உசைன் நயினாருடைய மகன் செய்கு மீரானைப் பற்றிய செய்திக ளையும் புராணத்தின் பாயிரத்தில் கூறி தனது நன்றியை வெளிப்படுத்தி யுள்ளார்.

இவர் தனது கவிச் செழுமையினை வெளிப்படுத்தும் விதமாய் 35 அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப் பாடல்களைக் கொண்ட 'முகியித்தீன் முனாஜாத்து' என்னும் இலக்கியத் தையும் படைத்துள்ளார். இஸ்லாமியர் கள் தமிழுக்கு அளித்த புதுவகை இலக்கியமான இவ்விலக்கியத்தில் முகியித்தீன் ஆண்டகையைப் போற்றிப் பாடுகிறார்.

பல இசைப்பாடல்களையும் பாடி யுள்ள ஈழத்தில் தோன்றிய முதலா வது இஸ்லாமியப் புலவராக விளங்கும் இவரின் 'முகியித்தீன் புராண'த்தின் மூலம் 19 ஆம் நூற்றாண்டின் இலங்கைத் தமிழிலக்கி யத்திற்கு வளம் சேர்த்த புலவருள் ஒருவாகத் திகழ்கின்றார்.

# உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் (1830-1910)

1830 ஆம் ஆண்டில் யாழ். உடுப்பிட்டி இமயான் குறிச்சி என்னும் ஊரில் அருளம்பல முதலியார் என்பவருக்கு மகனாகப் பிறந்தார்.

இவர் நல்லூர் சரவணமுத்துப் புலவரிடமும் நல்லூர் சம்பந்தப் புலவரிடமும் தொல் காப்பியம், நன்னூல், இலக்கண விளக்கம் போன்ற இலக்கண நூல்களையும் திருவிளை யாடல், கந்த புராணம், பாரதம், இராமாயணம் முதலிய இலக்கியங்க ளையும் கற்றுத் தேர்ந்து வடமொழி, தமிழ் முதலியவற்றில் பாண்டித்தியம் பெற்று விளங்கினார்.

கவிதை, உரைநடை, மொழி பெயர்ப்பு முதலிய இலக்கியங்களைப் படைப்பதில் சிறந்து விளங்கிய இவர் அறுபதுக்கு குறையாத பிரபந்தங்க ளைப் பாடி இலங்கையில் அதிகமான பிரபந்தங்களைப் பாடியவர் என்ற பெருமை பெற்றுத் திகழ்கிறார்.

இவர் பிரபந்தங்களும் தனிச்செய்யுள் களும் என மூவாயிரத்திற்கும் குறையாத பாடல்களை பாடியுள்ளார் என்பர். தெய்வங்கள் மீது 'திருவேரக யமகவந்தாதி', 'திருச்செந்தில் திருக் கந்தாதி (திருச்செந்தில் யமக வந்தாதி), 'செந்தில் மேய முருகன் யமகவந்தாதி', 'வல்லி புரத்தான் பதிகம்', 'கந்தவனநாதர் பதிகம்' என்பவற்றை பாடியுள்ளார்.

இவற்றில் 'கந்தவன நாதர் பதிகத்தில் "கண்ணொளியைத் தந்தாய் மறப்பேனோ" என தன் இளமைக் காலத்தில் கண்பார்வை இல்லாத போது இப்பதிகம் பாடி பார்வையைப் பெற்றார் என்பர்.

தமிழக - ஈழத்து தலங்கள்மீது, 'எட்டுக் குடிப்பிரபந்தம்', 'புலோலி நான்மணி மாலை', 'பருத்தித்துறைக் கலித்துறை', 'வல்வைக் கலித்துறை' முதலிய பிரபந்தங்களை பாடியுள்ளார்.

ஈழத்துப் புலவர்கள் தமிழகத் தலங்கள் மீதும் பிரபந்தங்கள் பாடி தமிழக அறிஞர்களாலும் புகழப் பட்டமைக்கு சிவசம்புப் புலவர் ஓர் உதாரண புருஷராக விளங்குகிறார்.

தம்மை ஆதரித்த வள்ளல்கள், ஆசிரியர்கள், மன்னர்கள், மடாதிபதி கள், வணிகப் பெருமக்கள் மீதும் பல பிரபந்தங்களைப் பாடியுள்ளார். தமிழ கத்தில் நான்காவது தமிழ்ச் சங்கத்தை நிறுவிய பாண்டித்துரைத் தேவர் மீது 'நான்மணி மாலை'யும் இராமநாதபுரம் பாற்கர சேதுபதி மீது 'கல்லாடக் கலித்துறை', 'இரட்டை மணிமாலை', 'நான்மணிமாலை' எனும் பிரபந்தங்களையும் தமது உறவினர்க ளாகிய அம்பலவாணர் மீதும் அவரின் மகன் மயில்வாகனம் மீதும் அவர்களுடைய பரம்பரைச் சிறப்பினைப் பாடுவதாக 'மயில்வாகன வம்ச வைபவம்' எனும் நூல்களையும் இப்ராஹிம் ஸாகிப், சிதம்பரப்பிள்ளை, மட்டக்களப்பு வைத்திய லிங்கம், ஆறுமுக நாவலர், சரவண முத்துப் புலவர், கந்தர் மடம் சுவாமிநாத பண்டிதர் போன்றோர் மீதும் தனிச்செய்யுட்களையும் பாடியுள்ளார்.

கல்லாடக் கவிபாடுவதற்கு வேறெ வரும் துணியாத காலகட்டத்தில் 'கல்லாடக் கலித்துறை' யாப்பில் சிறப்பாக 'உத்தர கல்லாடம்' பாடிய தனிச்சிறப்படைய இவர் கல்லாடக் கலித்துறை யாப்பிலக்கிய வடிவத்திற்கு முன்னோடியாகத் திகழ்கிறார் எனலாம்.

இவரின் தனிப்பாடல்கள் பல கற்றோர் உள்ளம் களிக்கும் வகையில் அமைந்துள்ளன. புலவர் அவர்களின் பிரபந்தங்கள் சிலவற்றை பண்டிதர் செவ்வந்திநாத தேசிகர், 'சிவசம்புநாதர் பிரபந்தத் திரட்டு- முதற்பாகம்' எனும் பெயரில் 1939 இல் வெளியிட்டார் எனினும் அவரின் பெரும்பாலான பிரபந்தங்கள் அச்சு வாகனம் ஏறவில்லை என்றே கருதப்படுகிறது.

கவிபாடுவதில் மட்டுமன்றி சிறந்த உரை எழுதுவதிலும் புலமை பெற்றிருந்தார். இலக்கியம், இலக்கணம், புராணம் என்பவற்றிற்கு உரையெழுதி 'உரையாசிரியர்' எனும் பெருமை பெறுபவராகவும் விளங்கு கிறார்.

'திருவேரக யமகவந்தாதி', 'திருச் செந்தில் திருக்கந்தாதி', 'மறைசை யந்தாதி', 'திருச்செந்தில் யமகவந்தாதி'

முதலிய அந்தாதி நூல்களுக்கும் 'தஞ்சைவாணன் கோவை', 'கந்த புராணம் வள்ளியம்மை திருமணப் படலம்', 'சேது புராணம்' முதலிய இலக்கியங்களுக்கும் உரையெழுதியதுடன் 'நன்னூல் விருத்தி யுரை', 'நேமிநாத உரை', 'சிதம்பரப் பாட்டியல் உரை', 'யாப்பருங்கல காரிகை உரை' முதலான இலக்கண உரைகளும் செய்துள்ளார்.

இவற்றுள் 'மறைசையந்தாதிக்கும் யாப்பருங்கலக் காரிகை'க்கும் இவர் செய்த உரைகள் ஈழத்தில் மட்டுமன்றி தமிழகத்திலும் பெரிதும் மதிக்கப் பெற்றதாகும்.

இயல்பாகவே கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்த இவர் ஆறுமுக நாவலரின் பிரசங்கங்களின் சாரத்தை ஒரு கவிதையாகக் கூறி அவையோரை கவர்வார். அதனால் ஆறுமுக நாவலரால் "கம்பனுக்குப் பின் ஒரு சம்பனல்லவா" என்றுவியந்து பாராட்டப் பெற்ற இவர் நாவலரிடமிருந்து 'புலவர்' எனும் பட்டத்தினையும் பெற்றார்.

கவிஞராக, உரையாசியராக மட்டுமன்றி சிறந்த ஆசிரியராகவும் விளங்கிய இவர் வல்வை இயற்றமிழ் போதனாசிரியர் வைத்தியலிங்கம், 'இலக்கணப்புலி' சுன்னாகம் முருகேச பண்டிதர், ஆவரங்கால் நமசிவாயப் பிள்ளை, 'இலக்கணக் கொட்டர்' குமாரசுவாமிப் புலவர், புலோலி தில்லைநாதப் புலவர், கரணவாய் ஞானப்பிரகாச தேசிகர் போன்ற பலரை தம் சீடர் பரம்பரையாக உருவாக்கினார்.

நாவலர் பரப்பிய சைவமும் தமிழும் எனும் கொள்கையுடன் ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் இணைப்புப் பாலமாக விளங்கிய இவர் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் மரபிலக்கிய வாதிகளுள் முதன்மையானவராகத் திகழ்கிறார்.

❀❀❀



## நவாலியூர் சோமசுந்தரப் புலவர் (1878-1953)

1878 ஜூன் 12ஆம் திகதி (1880, 1881 என்றும் சில நூல்களில் உள்ளன) யாழ். நவாலியூரில் கதிர்காமருக்கும் இலக்குமிப் பிள்ளைக்கும் மகனாகப் பிறந்த இவர் மானிப்பாயில் வாழ்ந்த அருணாசலம் உபாத்தியாயரிடம் தமிழ் இலக்கிய, இலக்கணங்களையும் மாரிமுத்து உபாத்தியாயரிடம் ஆங்கிலத்தையும் கற்றார்.

இவர் பிரபந்தச் சிற்றிலக்கியங்கள், சிறுவர் பாடல்கள், தனிப்பாடல்கள், நாடகங்கள், உரை நூல்கள் போன்ற இலக்கியங்களைப் படைத்துள்ள இவர் பதினைந்தாயிரம் பாடல்கள் வரை பாடியுள்ள இவர் இருபதாம் நூற்றாண்டில் ஈழத்தில் தலைசிறந்த மரபுக்கவிஞராக விளங்கினார்.

ஈழத்துச் சிறுவர் இலக்கியத்தின் முன்னோடியாகத் திகழும் இவரை தமிழ் கூறும் நல்லுலகம் 'தங்கத் தாத்தா' என அழைத்து மகிழ்கிறது. தனது இள வயதிலேயே ஆசிரியப் பணியில் இணைந்து கொண்ட இவர், 1899-1939 வரை நாற்பதாண்டுகளாக சேவை ஆற்றினார்.

இந்து சமயத்தை பாதுகாக்க வேண்டிய ஒரு காலகட்டத்தில் வாழ்ந்த புலவரவர்களும் ஆரம்பத்தில் சமயச் சார்புடைய பாடல்களையே பெரிதும் பாடினார். 'அட்டகிரிக் கலம்பகம்', 'கதிரைச் சிலேடை வெண்பா', 'கதிரைமலை வேலவர் பதிகம்', 'கந்தவனநாதர் திருப்பள்ளியெழுச்சி', 'நல்லையந்தாதி', 'மருதடி விநாயகர் பள்ளு', 'மருதடி விநாயகர் பாமாலை', 'கல்லுண்டாய் வைரவர் பதிகம்', 'நாமகள் புகழ்மாலை', 'தந்தையார் பதிற்றுப்பத்து', 'நவாலியூர் வன்னிய சேகரன் பள்ளு', 'நல்லைத் திருப்புகழ்'

'ஐம்புல வேடக்கும்மி' முதலிய இலக்கியங்களை தலங்கள் மீதும்,

தெய்வங்கள் மீதும், தாம் போற்றிய பெரியோர்கள் மீதும் பாடியுள்ளார்.

இவரது தனித்துவத்திற்கு அடையாளமாக விளங்குபவை இவர் பாடிய சிறுவர் பாடல்களேயாகும். 'ஆடிப் பிறப்பு', 'கத்தரி வெருளி', 'புளுக்கொடியல்', 'எலியும் சேவலும்', 'பவளக்கொடி', 'தாடி அறுந்த வேடன்','ஆடிப்பிறப்பு', 'கொளுக்கட்டை பொன்னன்', 'வெண்ணிலா', 'இலவு காத்தகிளி' போன்ற பல பாடல்களைக் கொண்ட 'சிறுவர் செந்தமிழ்' எனும் கவிதைத் தொகுதி 1955 இல் வெளிவந்தது.

தனது சிறுவர் பாடல்களுடாக அவர்தம் அனுபவ வட்டத்துள் நின்று சிறுவர்களை சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த இவர், ஈழத்து தமிழ் சிறுவர் பாடல் மரபில் பிரதேச வாழ்க்கை முறைகளை வெளிப்படுத்தியதோடு கற்பனை வளம், சமய-தமிழ் தேசிய விழிப்புணர்வுகளுடன் எளிய சொல்லாட்சி, சந்தம், ஓசை நயம், இனிமை, யாப்பு நெகிழ்வு முதலியவை கொண்ட நினைவில் வைத்திருக்கக் கூடிய எளிமையும் இனிமையும் நிறைந்த

"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!
கூடிப்பனங் கட்டிக்கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!"
(ஆடிப்பிறப்பு)

"கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று
காவல் புரிகின்ற சேவகா! – நன்று
காவல் புரிகின்ற சேவகா!
மெத்தக் கவனமாய் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார்? – உன்னை போல்
வேலை புரிபவன் வேறு யார்?"
(கத்தரி வெருளி)

முதலிய என்றும் நிலைத்திருக்கக் கூடிய பல பாடல்களைப் பாடியுள்ளார்.

ஈழத்துத் தேசிய-சமூக உணர்வை வெளிப்படுத்தும் 'தால விலாசம்', 'பனைமரக்கும்மி', 'தொல்புரம் பனைத் தொழில் விருத்தி', 'ஐக்கிய சங்க வேலைகள்', 'பஞ்சமில்லை' எனும் கவிதைகளையும் ஈழவளநாட்டுச் சிறப்புக்களான மகாவலி கங்கை, மாணிக்க கங்கை, கன்னியாய் வெந்நீரூற்று, கதிர்காமம் போன்றவற்றை பாடும் 'இலங்கை வளம்' எனும் நாட்டு வளப் பாடல்களையும் பாடியுள்ளார்.

இலங்கை சுதந்திரம் அடைந்தவுடன் இவரால் பாடப்பெற்ற இலங்கை வளப்பாடல்கள் சிந்து யாப்பில் அமைந்து பாரதியின் கவிதைச் சாயலைக் கொண்டதாக விளங்கியது. அப்பாடல்களால் கவரப்பட்ட பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள்,

"இலங்கை வளம் கேளாத செவி என்ன செவியே
இரும்பாலோ செம்பாலோ செய்திட்ட செவியே"

எனப் பாடியதிலிருந்து சோமசுந்தரப் புலவரின் கவித்திறத்தினை அறிந்து கொள்ள முடியும்.

செய்யுட்களை மட்டுமன்றி, அதனை மீறி புதுமை இலக்கியங்களையும் பாடிய இவர் உழவுத்தொழில், நெசவுத் தொழில் என்பனவற்றைக் கைவிட்டமையினால் ஏற்பட்ட வறுமையினை சுட்டிக் காட்டும் 'உயிரிளங்குமரன்' எனும் நாடகத்தையும் சைவ சித்தாந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தும் 'கந்த புராண தத்துவ விளக்கம்' எனும் நூலையும் மாணவர்களுக்கான உப பாடநூலாகிய 'சாவித்திரி தேவி சரிதம்' என்னும் உரை நூலையும் எழுதியுள்ளார்.

பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக விளங்கிய இவருடைய 'ஆடு கதறியது' எனும் பாடல் படிப்போர் நெஞ்சத்தை உருக்கவல்லது என்பர். இவர் 'மரதன் ஓட்டம்' போன்ற பிற நூல்களையும் இயற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

யாப்பிலக்கணங்களை பயிலுமுன்னர் சிறுவயதிலேயே கவிதை பாடி 'வரகவி'யாகத் திகழும் இவர் ஈழத்தில் நவீன போக்கில் கவிதை பாடும் பரம்பரை ஒன்று உருவாக வழிவகுத்து மரபு, புதுமை இரண்டிலும் தனது பாடல்களினால் ஈழத்து தமிழ்க் கவிதையினைச் செழுமையுறச் செய்த இவர் தன்னுடைய இறுதிக் காலம் வரை கவிதை பாடுவதைக் கைவிடாது தமிழ்ப் பெருமை பெருக்கிய 'தங்கத் தாத்தா'வாக விளங்குகிறார்.

❀❀❀



## புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை (1899-1978)

1899 டிசம்பர் 18 இல் மட்டக்களப்பு மண்டூரில் ஏகாம்பரப்பிள்ளை – சின்னத் தங்கம் தம்பதியர்க்கு மகனாகப் பிறந்தார்.

இளமையிலேயே குருகுல முறைப் படி தமிழ் இலக்கிய இலக்கணங் களைக் கற்றுத் தேர்ந்த இவர் ஆங்கிலக் கல்வியை கல்முனை உவெஸ்லிக் கல்லூரியில் கற்றார். உயர் கல்வியை யாழ்.நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலைக் காவியப் பாடசாலையில் கற்றபோது செந்தமிழ்ப் பரிபாலன . சங்கத்தார் நடாத்திய பரீட்சையில் விசேட சித்தி பெற்று 'பண்டிதர்' பட்டத்தினைப் பெற்றார்.

மட்டக்களப்பு – திருகோணமலை - யாழ்ப்பாணம் முதலிய இடங்களின் கல்லூரிகளில் ஆசிரியராகவும் பண்டித ராகவும் மட்டக்களப்பு ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் தமிழ்ப் பேராசியராகவும் மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் தமிழ்த் துறைத்தலைவர் தலைவராகவும் பணி புரிந்தார்.

1950 இல் மட்டக்களப்பு தமிழ்க் கலை மன்றத்தினர் இவருக்கு 'புலவர்மணி' எனும் பட்டம் சூட்டி கௌரவித்த பின் 1952 இல் அம் மன்றத்தின் தலைமைப் புலவராகவும் விளங்கிய இவருக்கு 'மதுரகவி', 'சித்தாந்த ஞானபாநு' எனும் பட்டங்களும் உள்ளன.

இவர் கவிஞர், பேச்சாளர், உரை- வசனகர்த்தா, மொழி பெயர்ப்பாளர், நாடகாசிரியர், இதழாசிரியர் எனப் பன்முகத்தன்மை கொண்ட படைப்பா ளியாக விளங்கினார்.

தனது முதலாவது கவிதையான 'மண்டூர்ப் பதிக'த்துடன் தமிழுலகில் நுழைந்த இவரால் கரும யோகம், பக்தி யோகம், ஞானயோகம் எனும் மூன்று பாகங்களாகப் பாடப்பட்ட 'பகவத்கீதை வெண்பா', 'விபுலானந்தர் மீட்சிப் பத்து', 'கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரர் பதிகம்', 'சித்தாண்டிப் பதிகம்', 'மாமாங்கப் பதிகம்', 'சர்வசமய சமரசப் பதிகம்', 'இலங்கைப் புகையிரதப் பெருவிபத்து- 1923', என்பவற்றுடன் இவரது பல தனிக் கவிதைகள் அடங்கிய 'புலவர்மணி கவிதைகள்' எனும் தொகுப்பும் கவிதை நூல்களாக வெளிவந்துள்ளன.

'வெண்பாவிற் பெரியதம்பி' என ஈழத்துத் தமிழறிஞர்களால் அடை மொழியிட்டு அழைக்கப் பெற்ற இவரு டைய வெண்பாக்களாலான 'பகவத் கீதை வெண்பா' எனும் கவிதை நூல் இவரது படைப்புக்களில் தலை சிறந்து விளங்குகிறது. இந்நூலுக்கு 1962 இல் சாகித்திய மண்டலப் பரிசு வழங்கப் பட்டது.

இவரின் கவித்துவத் திறனுக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் 'இலங்கை மணித்திரு நாடு' எனும் தலைப்பில் இவர் பாடிய தேசிய உணர்வு மிக்க இப்பாடல், இவரை தேசியக்கவி மட்டத்திற்கு உயர்த்தி யுள்ளது என்பர்.

'சட்டம்' எனும் தலைப்பில் இவர் பாடிய கவிதையில் சிலேடை நயத்தினைக் காணலாம். விஜயநகர- நாயக்கர் கால கவிதைச் செல்வாக்கு இவரின் காலத்தில் காணப்பட்டமைக்கு இக்கவிதை சான்றாக அமைகின்றது என்பர்.

மரபுவழிக் கல்விபெற்று மரபுக் கவிஞராக செய்யுளில் கவிதை படைத்த இவர் உரைநடையிலும் பல படைப்புக்களை எழுதியுள்ளார். இவருடைய வசன நடைக்கு உரைகல் போன்று விளங்கும் 'உள்ளதும் நல்லதும்' எனும் கட்டுரைத் தொகுதி 50 தலைப்புக்களில் அவருடைய வாழ்க்கைச் சம்பவங்களின் திரட்டாக வெளிவந்தது. தினகரன் வாரமலரில் இவர் எழுதிய 'கற்றறிந்தோர் ஏற்றும் கலித்தொகை' எனும் கட்டுரைத் தொடர் 'பாலைக்கலி' எனும் நூலாக வெளிவந்து உள்ளது.

மரபுவழி செய்யுள் இலக்கியங்களில் ஆழ்ந்த தேர்ச்சியும் பற்றும் கொண்ட வராக விளங்கிய இவர் 'புலவர் மணி', 'பண்டிதர்' போன்ற பட்டங்க ளைப் பெற்றிருந்தும் பண்டிதத் தமிழில் எழுதாமல் பாமரர்க்கும் புரியும்

வண்ணம் எளிய தமிழில் தனது உரைநடையினைப் படைத்தார். 'உள்ளதும் நல்லதும்' இதற்கு சிறந்த தொரு எடுத்துக்காட்டாக விளங்கு கிறது.

உரைநடையில் இத்தகு எளிமையை இவர் கொண்டிருக்க 'கிழக்குத் தபால்' எனும் வார இதழில் இவர் ஆசிரியராக பணிபுரிந்த அனுபவமே காரணமாக அமைந்தது என்பர்.

கவிதை, உரைநடை போன்ற துறைகளில் முத்திரை பதித்த இவர் சீவக சிந்தாமணியின் காவியத் தலைவனாகிய சீவகனின் சரிதத்தை 'பாலசரித நாடகம்' எனும் பெயரில் எழுதி வெளியிட்டு நாடகத் துறையிலும் தன்னுடைய தடங்களைப் பதித்துக் கொண்டார். அத்தோடு 1926 இற்கு பின்னர் வெளிவந்த இதழ்கள், நினைவு மலர்கள், நூல்கள் என்பவற்றில் இவருடைய ஏராளமான கவிதைகள், கட்டுரைகள், ஆசியுரைகள் என்பனவும் வெளிவந்துள்ளன.

வானொலிப் பேச்சாளராக, மேடைப் பேச்சாளராக, கவியரங்கக் கவிஞராக, பரீட்சகராக, கிழக்கின் சைவசமயக் காப்பாளராக, சமாதான நீதிவானாக, மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத் தலை வராக, இலங்கை சாகித்ய மண்டல உறுப்பினராக பல சமூக கலை-இலக்கியத்துறைகளிலும் தன்னை இணைத்துக் கொண்ட இவர் இந்து, இஸ்லாம் மக்களிடையே ஒற்றுமை நிலவ வெகுவாகப் பாடுபட்டார்.

சிறுபராயத்திலிருந்தே நட்புக் கொண்டி ருந்த 'பண்டிதமணி' சி.கணபதிப்பிள்ளை வடக்கிலும் 'புலவர்மணி' ஏ.பெரிய தம்பிப் பிள்ளை' கிழக்கிலும் உறவுப் பாலமாகத் திகழ்ந்து உரைநடை-செய்யுள் இலக்கியங்களை வளர்த்து, அக்காலத் தமிழறிஞர்களால் 'இரட்டை யர்கள்' என அழைக்கப் பெற்றனர்.

❀❀❀



# F.X.C.நடராசா

## (1911-1997)

1911 ஆடி இருபத்தொன்றில் யாழ். காரை நகரில் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை காரைநகரிலே பெற்றார். பின் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் புகுந்ததும் மட்டக்களப்பிலேயே தனது வாழ்வையும் இலக்கியப் பணியையும் ஆரம்பித்து அமைத்துக் கொண்டார்.

'மகாவித்துவான்', 'கலாசூரி', 'இலக்கியச் செம்மல்', 'இலக்கியக் கலாநிதி', 'வித்துவ சிரோன்மணி', 'முதறிஞர்' போன்ற பட்டங்களை தனது பணியின் மூலம் தன்னைத் தேடி வரவழைத்த இவர், ஆசிரியராக, விரிவுரையாளராக, ஆய்வாளராக விளங்கி கவிதை, கட்டுரை, நாட்டா ரியல், நூற்பதிப்பு, நூற்தொகுப்பு, திறனாய்வு, இலக்கணம், மொழி பெயர்ப்பு முதலிய துறைகளில் தனது இலக்கியப் பங்களிப்பினை ஆற்றி யுள்ளார்.

கவிதை நூல்களில் 'காரைநகர் மான்மியம்' எனும் நூலினை எழுதியதாகத் தெரிகிறது.

'ஈழமும் தமிழும்', 'மொழிபெயர்ப்பு மரபு', 'ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு', 'ஜேர்மனி-சுருக்க விளக்கம்', நாவலர் பெருமான் வாழ்க்கைக் குறிப்பு', 'இலக்கிய விமரிசனம் - பாடம் பாட பேதம்', 'நன்னூற் காண்டிகை உரையும் நாவலர் பெருமானும்', 'நூலும் பதிப்பும்:நன்னூல் மூலம்-காண்டிகையுரை- விருத்தியுரை', 'சரசோதி மாலை - ஆய்வுக் கட்டுரை' போன்றவற்றுடன் 'இலங்கைச் சரித் திரம்' எனும் பெயரில் போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேயர் காலங்களை பற்றி எழுதிய மூன்று தொகுதி நூல்களும் இவர் எழுதிய உரை நூல்களாகும்.

ஈழத்து தமிழ் இலக்கியப் பதிப்புத் துறை முன்னோடிகளில் ஒருவராக விளங்கும் இவர் 'எண்ணெய்ச் சிந்து', 'மட்டக்களப்பு மான்மியம்', 'கண்ணகி வழக்குரை', 'வீரமா முனிவரின் தொன்னூல் விளக்கம்', 'விபுலானந்தர் மீட்சிப்பத்து' போன்ற நூல்களைப் பதிப்பித்து தமிழ்ப் பதிப்புத்துறையில் முக்கியமானவராகத் திகழ்கிறார்.

நூற்பதிப்புத்துறையில் புகழ்பெற்ற வராக விளங்கும் இவர் பல அரிய விடயங்களைத் தொகுத்து நூல்களாக வெளியிட்டுள்ளார். அவற்றுள் 'ஈழத்து நாடோடிப் பாடல்கள்', மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும்' போன்றவை குறிப்பிடத்தக்கன.

பதிப்பு, தொகுப்பு முயற்சிகளில் ஈடுபட்ட இவர் 222 இற்கும் குறையாத ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். ஈழத்துத் தமிழ் ஆய்வாளருக்கு பெரிதும் பயன்படத்தக்க இக்கட்டுரைகள் ஈழத்தில் வெளிவந்த பிரபல பத்திரிகைகள், இதழ்கள், நூல்கள் போன்றவற்றை அக்காலத்தில் அலங்கரித்துள்ளன.

நாட்டாரியல் ஆய்வுகள், கிராமியக் கலைகள், மக்கள் வாழ்க்கை, வரலாறு, சமூகம், சமயம், கிறிஸ்தவ இலக்கியம், இலக்கணம், ஈழத்து இலக்கியம், மட்டக்களப்பு வரலாறு என பல்வகைப்பட்ட துறைகளில் தனது ஆய்வுப்பார்வை மூலம் அரிதான பல விடயங்களை ஆவணப்படுத்தியுள்ளார்.

மொழிபெயர்ப்புத் துறையிலும் தனது பணியினை ஆற்றியுள்ளார். அந்த வகையில் பேராசிரியர் உவில்சன் ஆங்கிலத்தில் எழுதிய நூலை 'இலங்கை அரசியலும் பொருளா தாரமும்' எனும் பெயரில் மொழி பெயர்த்தமையும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கிலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகவும் உலகத்தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் உறுப்பின ராகவும் சேவையாற்றி, ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் 'ஈழகேசரி', மறுமலர்ச்சி', 'முற்போக்கு' முதலிய காலகட்டங்களில் வளர்ந்த தமிழ் இலக்கிய மரபு மீறல் ஆக்க முயற்சிகளுக்கு எதிராக மரபு வாதிகளுடன் இணைந்து நின்று மரபிலக்கியப் போர் செய்தவர்களுள் முதன்மையானவராகத் திகழ்ந்த இவர் தன் வாழ்நாளில் சேகரித்த 2500 இற்கும் குறையாத நூல்களை கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்திற்கு வழங்கி இறுதிவரை தமிழ்த்தொண்டராகவே வாழ்ந்து ஈழத்து இலக்கியவுலகில் நிலைபெற்று விளங்குகிறார்.

❀❀❀



# கனக-செந்திநாதன்

## (1916-1977)

1916 கார்த்திகை ஐந்தில் யாழ்.குரும்பசிட்டியில் கனகசபை-பொன்னம்மா தம்பதியினர்க்கு பிறந்த 'திருச்செவ்வேல்' எனும் இயற்பெயர் கொண்டவரே இவராவார்.

தன்னுடைய ஆரம்பக் கல்வியை குரும்பசிட்டி மகாதேவ வித்தியா சாலையிலும் இலக்கியத்தினை பண்டித மணி. சி.கணபதிப்பிள்ளை, பொ.கைலா சபதி ஆகியோரிடம் முறையாகக் கற்ற இவர் ஆசிரிய சேவையில் முப்பத்து இரண்டு ஆண்டுகளாக பத்துப் பாடசாலைகளில் பணிபுரிந்தவர்.

சிறுகதை, நாவல், நாடகம், இலக்கிய ரசனை, விமர்சனம், கவிதை, கட்டுரை, சிறுவர் இலக்கியம், ஆய்வு எனப் பல்துறைகளில் தடம்பதித்த இவர் 'இரசிகமணி' என கௌரவிக்கப் பட்டவர்.

1943 இல் சோ.சிவபாதசுந்தரத்தின் வழி காட்டலோடு எழுத்துலகில் பிரவேசித்த இவர், இருபத்தைந்து சிறுகதைகளை தமிழுக்குத் தந்துள் ளார். இவரின் 'வெண்சங்கு' எனும் சிறுகதைத் தொகுதி அவர்தம் படைப்பாற்றலை பறைசாற்றியது.

'செம்மண்' என்ற இவரது சிறுகதை 'ஒப்சேவர்' பத்திரிகையில் 'ஈழநாட்டின் இன்றைய சிறுகதைகள்' என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும் 'ஈழத்துச் சிறுகதைத் தொகுதியில் வெளியான 'ஒருபிடிச் சோறு' எனும் மற்றொரு

சிறுகதை ரஷ்ய மொழியில் வெளிவந்த ஈழத்துச் சிறுகதைத் தொகுதியிலும் இடம்பிடித்து இவரது சிறுகதைப் பணியின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன.

இவரது ஆக்கப் படைப்புக்களில் 'விதியின்கை' , 'மத்தாப்பு', 'வெறும் பானை' எனும் நாவல்களும் வெளி வந்துள்ளன.

"யாழ்ப்பாணப் பழமை, சமயச் சூழல், பழமையான கதைசொல்லும் உத்தி என்ற என் தனித்துவத்தை நான் இழந்துவிடத் தயாராக இல்லை. என் கதைகளை நோக்குவோர் என் தனித்துவம் என்னும் அச்சாளரத்தினூடு பார்த்தல் நல்லது. தாம், தாம் வைத்திருக்கும் கொள்கை, அரசியற் பிடிப்பு, மேனாட்டு உத்திமுறை என்னும் இவற்றை அளவுகோலாகக் கொண்டு சிரமப்படவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்று தனது கதைகளைப் பற்றி பிரகடனம் செய்த இவரது புனைவுகள் கடந்த தலைமுறை காலத்து யாழ்ப்பாண வாழ்வையும் கலாசாரத்தையும் உயிர்ப்போடு பதிவு செய்துள்ளன.

பன்னிரண்டு நாடகங்களை எழுதி யுள்ள இவர் தமது சமகாலத்தில் எழுதிக் கொண்டிருந்த பல படைப்பாளி களது கவிதைகளை பற்றி இவர் எழுதிய விமர்சனங்களும் தமிழ் அறிஞர்களது வாழ்க்கை வரலாறுகளும் சிற்றிலக்கிய வடிவங்கள் குறித்த வானொலிப் பேச்சுக்களும் மாணவர்க ளுக்கான நல்ல இலக்கிய இரசனைக் கட்டுரைகளும் நூலுருப் பெற்றுள்ளன. அவற்றுள் 'ஈழத்துக் கவிமலர்கள்', 'ஈழம் தந்த கேசரி', 'பிரபந்தப் பூங்கா', 'ஈழத்துப் பேனா மன்னர்கள்', 'கடுக்கனும் மோதிரமும்', 'முற்றத்து முல்லை', 'ஈழத்துக் குழந்தைப் பாடல்கள் பற்றிய ரசனை' என்பன குறிப்பிடத்தக்கனவாகத் திகழ்கின்றன.

இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இலக்கிய வரலாற்றின் மூல நூலாக விளங்கும் 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' எனும் தனது ஆய்வு நூலினூடாக ஈழத் திருநாட்டின் இலக்கிய வளத்தை தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதும் அறியச் செய்த இவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவரது பாடல்களை 'திறவாத படலை' எனும் பெயரில் விமர்சனம் செய்து எழுதிய நூல் ஈழத்தின் முதலாவது படைப்பாளி ஒருவரின் படைப்புக்களை விமர்சித்த நூலாக அமைகின்றது.

மறுமலர்ச்சிச் சங்கம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம், அகில இலங்கை எழுத்தாளர் சங்கம், யாழ். இலக்கிய வட்டம், சன்மார்க்க சபை ஆகியவற்றின் வளர்ச்சியிலும் இலக்கியச் சேவை ஆற்றிய இவருக்கு அம்பனைக் கலைப் பெருமன்றம் 'இலக்கியச் செல்வர்' எனும் பட்டத்தை வழங்கினும் கிழக்கிலங்கை எழுத்தாளர் சங்கமே 'இரசிகமணி' எனும் பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தது.

தான் வாழ்ந்த குரும்பசிட்டிப் பகுதியில் தொடர்ந்து பதினைந்து வருடங்களாக பேச்சுக் கச்சேரி நிகழ்த்தி நவீன இலக்கியம் குறித்த பிரக்ஞையை அக்கால இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்தியதோடு தனது பேச்சுக் கச்சேரியில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள், அவர்களது படைப்புக் கள், அக்காலத்தில் வெளியான பத்திரிகைகள் பற்றிக் குறிப்பிடுவதோடு சிறுகதை, கவிதைகள் போன்றவற்றை படித்து அதனை விமர்சனம் செய்து நல்ல படைப்பாளிகளையும் அவர்தம் படைப்புக்களையும் ஊக்கப்படுத்தினார்.

தனது சமகாலத்து எழுத்தாளர் மீது பேரன்பு கொண்டவராக விளங்கிய இவர் பல இளைய படைப்பாளிகள் உருவாக அவர்களை ஊக்குவித்து முள்ளார்.

இவரது இலக்கிய நேர்மை, நவீன ஈழத்து தமிழ் இலக்கியம் மீது கொண்ட பற்று போன்றவற்றை 'இரசிகமணியும் தமிழ்மரபு விமர்சனமும்', யாழ்.இலக்கிய வட்டம் வெளியிட்டுள்ள இவரது படைப்புக்கள் அனைத்தையும் கொண்ட 'பூச்சரம்' போன்ற தொகுப்புக்க ளினூடாக அறிந்து கொள்ளலாம்.

மரபிற்கும் நவீனத்திற்கும் பாலமாக திகழும் இரசிகமணி பழமையிலே ஊறி நின்று ஒரு கிராமத்தின் நவீன இலக்கியம் பற்றிய பரிச்சியத்தை ஏற்படுத்தி அங்கு இன்றுவரை ஒரு இலக்கியப் பாரம்பரியம் தொடரவும் காரணமான மாமனிதனாகத் திகழும் இவரது பெயரால் வழங்கப்படும் கனக செந்தி' விருது இவரது பெருமையை என்றென்றும் பறைசாற்றும்.

❀❀❀



# அ.செ.முருகானந்தன்
# (1921-1998)

1921 ஒக்டோபர் ஒன்பதில் யாழ்ப்பாணத்தில் பிறந்தார். அழகு செல்வ (அளவெட்டி செல்லக்கண்டு) முருகானந்தன் எனும் இயற்பெயர் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை மாவிட்டபுரத்திலும் பின்னர் மஹாஜனக் கல்லூரியிலும் காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரியிலும் கற்றார்.

1938 இல் தெல்லிப்பளை மஹா ஜனக் கல்லூரியில் கற்கின்ற காலத்தி லேயே 'ஈழகேசரி – மாணவ மலரி'ல் எழுதத் தொடங்கினார்.

நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், நாவல், வரலாறு, விமர்சனம்-திறனாய்வு, நாடகம், கட்டுரை, மொழிபெயர்ப்பு, சஞ்சிகை எனும் துறைகளில் தன் ஆளுமையை வெளிப்படுத்தியவர்.

ஈழத்தின் தமிழ்ச் சிறுகதைத் துறையை மேல்நோக்கி அழைத்துச் சென்ற தொடக்க கால சிறுகதை ஆசிரியர்களிலே ஒருவராக விளங்கும் இவர் 1941 இல் ஈழகேசரி ஆசிரியர் குழுவில் இணைந்து பணியாற்றத் தொடங்கினார்.

இக்காலத்திலே இவர் எழுதிய பல சிறுகதைகள் ஈழத்துப் புனைகதை யுலகில் முக்கிய இடம்பெற்றுத் திகழ்கின்றன.

எல்லாமாக பதினெட்டு சிறுகதை களை ஈழகேசரியில் எழுதியுள்ள இவரது கதைகளில் ஒன்றான 1944 இல் வெளியான 'வண்டிச் சவாரி' ஈழத்தின் உன்னதமான முதல் ஏழு சிறுகதை களில் ஒன்றாக அமையக் கூடியது என்பர். இது தவிர 'ஸ்ரீராமாநுஜம்', 'வெறுப்பும் வெற்றியும்', 'எச்சில் இலை', 'காப்பிரி', 'பரிசு', மனித மாடு', 'கிழவி', 'விடியுமா?' போன்ற பல நல்ல கதைகளையும் ஈழகேசரியில் எழுதி யுள்ளார்.

1940 இல் 'ஸ்ரீராமாநுஜம்' என்ற சிறுகதை மூலம் ஈழகேசரியில் எழுதத் தொடங்கிய இவர் 1957 இல் 'பரிசு பெற்ற கதை' எனும் கதை வரை எல்லாமாக பதினெட்டுக் கதைகளை எழுதி அச்சஞ்சிகை ஊடாக பதினேழு வருடங்கள் ஈழத்துத் தமிழ் சிறுகதைத் துறைக்கு அளப்பரிய பணி புரிந்துள்ளார்.

ஈழகேசரியில் பணியாற்றிய இவர் 'மறுமலர்ச்சி' குழுவில் இணைந்து அக்குழு 1946 இல் வெளியிட்ட 'மறுமலர்ச்சி' சஞ்சிகையிலும் இணை ஆசிரியராகவும் பணியாற்றிய இவர் 'சுதந்திரன்', 'வீரகேசரி', 'ஈழநாடு – வாரமலர்', போன்ற இதழ்களிலும் பணியாற்றியதோடு 'எரிமலை' எனும் பத்திரிகையையும் வெளியிட்டுள்ளார்.

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைக்கு பெருமை சேர்க்கும் பல சிறுகதைகளை எழுதியுள்ள இவர் 1948 இல் சித்திரைப் புத்தாண்டில் வெளியான மறுமலர்ச்சி இதழில் வெளியிட்ட 'மெனிக்காவின் ஜாதகம்' எனும் கதை தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட முதலாவது சிங்களச் சிறுகதையாக விளங்குகிறது. அத்தோடு இவர் 1958 இல் 'நவஜீவன் 'இதழில் எழுதிய 'காளிமுத்துவின் பிரஜாவுரிமை' எனும் சிறுகதை மலையத்தைச் சாராத ஒருவர் மலையகம் பற்றி எழுதிய முதலாவது சிறுகதையாகவும் இவருடைய 'காப்பிரி' எனும் சிறுகதை மனித நேயத்தை சர்வதேசத்துடன் நின்று பார்ப்பதாகவும் அமைந்து ஈழத்து தமிழ்ச் சிறுகதையை பல்வேறு திசைகள் நோக்கி வழி நடத்தி யுள்ளன.

தனது சிறுகதைகளில் போலியான கற்பனைப் போக்கிற்கு இடம் தராது யதார்த்தச் சித்தரிப்புக்களுக்கு முக்கியத்துவமளித்த இவர் சமூக உண்மை நிலைகளை மனித நேயத்துடன் தனது கதைகளில் படைப்பதில் முன்னின்றார்.

ஏராளமான சிறுகதைகளை எழுதி யுள்ள இவரது பெரும்பாலான படைப்புக்கள் நூலுருப் பெறாத நிலையில் 'மனித மாடு' எனும்

ஓரேயொரு சிறுகதைத் தொகுப்பு மட்டும் வெளிவந்துள்ளது என்பர்.

'புகையில் தெரிந்த முகம்', 'யாத்திரிகன்', 'ஜீவபூமி', 'ஜெயந்தி' முதலிய நாவல்களை எழுதியுள்ள இவர் 1945 இல் ஈழகேசரியில் ஆங்கில நாவலொன்றினை 'அலிபாபாவின் குகை' எனும் பெயரில் மொழி பெயர்த்து எழுதியுள்ளார்.

தமது புனைவுக் களங்களை யாழ்ப்பாணத்தோடு மட்டுமன்றி திருகோணமலை, கொழும்பு, மலையகம் முதலிய நகரங்களை அடிப்படையாக வைத்தும் நகர்த்தியுள்ள இவர், தனது படைப்புக்களில் காந்திய, சமூக சீர்திருத்த, சுயமரியாதை, பொதுவுடைமைக் கருத்துக்களையும் வெளிப்படுத்தியுள்ளார்.

புனைகதைத் துறையில் தன் ஆளுமையை வெளிப்படுத்திய இவர் நாடகத் துறையிலும் தன்னுடைய தடத்தினைப் பதித்துள்ளார். 1943 இல் இலங்கை வானொலி நடத்திய நாடகப் போட்டியில் முதற் பரிசு பெற்ற 'சுதந்திரக்கவி' எனும் நாடகம் உட்பட பல நாடகங்களை எழுதியுள்ளார் என்பர்.

1938 இல் ஈழகேசரி மூலம் எழுத்துலகில் நுழைந்த இவர், மறுமலர்ச்சி எழுத்தாளராக தன்னை அடையாளப் படுத்திக் கொண்டதோடு ஈழத்தின் நவீன இலக்கிய மூலவர்களில் ஒருவராகவும் ஆளுமை மிக்க படைப்பாளியாகவும் நீண்டகால பத்திரிகைப் பணியாளராகவும் விளங்கியவர் ஆவார்.

1981 இல் ஈழகேசரி எரிக்கப்பட்ட பின்னர் எழுதுவதைக் கைவிட்டு, இறுதிவரை மானுட நேயம் மிகுந்த படைப்பாளியாகவே வாழ்ந்து தனது படைப்புக்கள் மூலம் ஈழத்து இலக்கியவுலகில் நிலையான இடம்பெற்று விளங்குகிறார்.

❀❀❀



# எஸ்.அகஸ்தியர் (1926-1995)

1926 இல் யாழ். ஆனைக் கோட்டையில் பிறந்து அக்காலத்து எஸ்.எஸ்.ஸி. வகுப்புடன் தமது கல்வியை முடித்துக் கொண்டு அரச அலுவலராக பணியாற்றினார்.

அகஸ்தியர் எனும் சாதாரண மனிதன் தனது வீட்டில் கிராமத்தில் அயற் சூழல்களில் நாள்தோறும் நிகழுகின்ற சம்பவங்களால் தாக்கமுற்று 'சமூக மாற்றமும் சமூக மேம்பாடும்' காணவேண்டும் என்கின்ற உந்துதலினால் மார்க்சிச சிந்தனையாளனாக தன்னை வளர்த்து அதன் வழியில் தன்னுடைய வாழ்க்கைப் பயணத்தை அமைத்துக் கொண்டார்.

1955 இன் பின்னர் சிறுகதைத் துறை மூலம் இலக்கியவுலகினுள் நுழைந்த இவர் சிறுகதை, நாவல், குறுநாவல், ஆய்வு · விமர்சனம், கட்டுரை, உணர்ச்சிச் சித்திரம், நாடகம் எனப்பல துறைகளிலும் தன் ஆளுமையை வெளிப்படுத்தினார்.

ஏறக்குறைய 360 சிறுகதைகளை எழுதிய இவரின் பல சிறுகதைகள், தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 'அகஸ்தியர் கதைகள்', 'மேய்ப்பர்கள்', 'எவளுக்கும் தாயாக', 'இலவுகாத்த கிளி' என்னும் தொகுதிகள் இதுவரையில் வெளிவந்துள்ளன.

சிறுகதைகளில் பொருளடக்கத்தில் மட்டுமன்றி வடிவத்திலும் மாறுதல் களைக் கையாண்டுள்ளார். இவரது 'விலை' எனும் சிறுகதையில் முழுக்க முழுக்க பாத்திர உரையாடல்களின் மூலமே கதையை நகர்த்தி தான் கூறவந்த விடயத்தை தெளிவுறக் கூறி அதில் வெற்றியும் கண்டுள்ளார்.

ஒன்பது நாவல்களையும் பத்து குறு நாவல்களையும் எழுதி நாவுல்-குறுநாவல் துறைகளிலும் தனது படைப்பாற்றலை வெளிப்படுத்தியுள்ளார். நாவல்களைப் பொறுத்தவரையில் 'திருமணத்திற்காக ஒரு பெண் காத்திருக்கின்றாள்', 'மண்ணில் தெரியு தொரு தோற்றம்', 'எரிநெருப்பில் இடை பாதை இல்லை' என்பனவும் 'கோபுரங்கள் சரிகின்றன', 'நரகத்தி லிருந்து', 'இருளினுள்ளே', 'மகாகணம் பொருந்திய' போன்ற குறுநாவல் களும் வெளிவந்துள்ளன.

இவரால் எழுதப்பட்ட 'எரிமலை' எனும் சமூக நாவலை 'தினகரன்' பத்திரிகை பிரசுரிக்க மறுக்க 'ஈழநாடு' வார இதழ் இதனை வெளியிட்டு, இத்தொடர் நிறைவுறும் முன்னரேயே இடையில் நிறுத்தப்பட்டது. பின்னர் இந்நாவல் முப்பது வருடங்களின் பின்னர் 1992 இல் 'எரிநெருப்பில் இடைபாதை இல்லை' எனும் பெயர்மாற்றத்துடன் வெளிவந்தது.

இருபது வானொலி நாடகங்க ளையும் நாற்பது நாட்டுக் கூத்துக்க ளையும் எழுதியுள்ள இவரது 'நவீன பரமார்த்த குருவும் அவர்தம் சீடர்களும்', 'அலைகளின் குமுறல்' போன்ற நாடகங்கள் நூலுருவில் வெளிவந்துள்ளன.

நூற்றுக்கு மேற்பட்ட விமர்சனக் கட்டுரைகளும் எழுதியுள்ள இவர் 'நாட்டுக்கூத்துக்கலாநிதி பூந்தான் யோசேப்பு வரலாறு', 'ஒரு நூற்றாண் டின் இரு தமிழ் நாவல்கள்', 'கலை இலக்கியமும் வர்க்க நிலைப்பாடும்' ஆகிய ஆய்வு நூல்களையும் எழுதியு ள்ளார். 'அகஸ்தியர் பதிவுகள்' எனும் நூலில் அவரின் கட்டுரைகளும் அவரது படைப்புக்கள் பற்றிய கட்டுரைகளும் அடங்கியுள்ளன.

நடைச்சித்திரங்களையும் 'நீ' எனும் உணர்வூற்றுருவச் சித்திரம் 'மானிட தரிசனங்கள்' எனும் விவரணச் சித்திரம் மற்றும் எழுபது உருவகக் குட்டிக் கதைகளையும் எழுதியுள்ள இவரது 'நீ' வித்தியாசமான ஒரு படைப்பாகும்.

அகஸ்தியரின் படைப்புக்களில் பேச்சு வழக்குச் சொற்கள் யாழ்ப்பாணத்து மண்வாசனையுடன் அவற்றிற்குரிய இயல்பான ஆற்றலோடு பயன்படுத்தப் பட்டிருக்கும் என்பர்.

1983 இல் ஏற்பட்ட இன வன்செயலினால் தனது உடைமை களையும் படைப்பாக்கங்களையும் இழந்து மிகவும் துன்பத்துடன் புலம்பெயர்ந்து பிரான்சில் அடைக்கலம் புகுந்த பின்னர் மீண்டும் புது உத்வேக த்துடன் தனது படைப்புப் பணியினைத் தொடர்ந்த இவர் அங்கு வாழ்ந்த ஒன்பது வருடங்களில் வருடத்துக்கு ஒரு நூலென ஒன்பது நூல்களை வெளியிட்டுள்ளார் என்பர்.

பரவிக்கிடந்த ஐரோப்பிய எழுத்தாளர் களையும் இளைய தலைமுறையையும் ஒன்றிணைக்கப் பாடுபட்ட இவர் தான் நம்பியிருந்த கொம்யூனிச உலகில் ஏற்பட்ட உடைவுகளினால் பெரிதும் தாக்கமுற்று உடல் நலப்பாதிப்புக்கு உள்ளாகி இறக்கும் வரை தொடர்ந்து 'போர்க்குணம்' மிக்க படைப்பாளி யாகவே விளங்கினார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முதன்மையான தூண்களில் ஒருவரான இவர் மார்க்சிச வாதியாகவே இறுதிவரை வாழ்ந்து தனது எழுத்துக்களிலும் அதையே பிரகடனம் செய்தார். சகலவிதமான அடக்குமுறை விலங்குகளையும் உடைத்துக் கொண்டு மனிதன் மேலெழ வேண்டும் என்பதற்காகவே எழுதிய அவர் "இலக்கியங்கள் சமுதாயத்தின் நடைமுறை வாழ்க்கையை சித்திரிப்பது மாத்திரமல்ல அச்சமுதாயத்தை மாற்றும் கருவியாகவும் விளங்க வேண்டும். இதுவே தரமான இலக்கியத்திற்கு இலக்கணம்" என்று தான் கொண்ட கொள்கைக்கு ஏற்பவே இறுதிவரை தொடர்ந்து எழுதினார்.

சமூக மேம்பாட்டைப் பற்றிச் சிந்தித்து, அதைப்பற்றியே எழுதி தனது இறுதி மூச்சு வரை சமுதாயத்தில் பொதுவுடைமைச் சித்தாந்தம் மேலோங்க வேண்டும் என்ற ஒரே சிந்தனையுடன் செயற்பட்ட இவர் ஈழத்தின் முற்போக்கு இலக்கிய வாதிகளுள் தலைசிறந்தவராக விளங்குகிறார்.



# நந்தி
## (1928-2005)

1928 மார்ச் 30 ஆம் திகதி வடபுலத்தில் பிறந்த செல்லத்துரை சிவஞானசுந்தரம் எனும் இயற்பெயர் கொண்ட பேராசிரியர். 'நந்தி' அவர்கள் தொழிலால் மருத்துவராய் இருந்தும் இந்நாட்டிலும் இந்நாட்டுக்கு வெளியிலும் தமது புலமைத் தடத்தினை ஆழப்பதித்த பெருமைக் குரியவர்.

சிறுகதை, நாவல், நாடகம், சிறுவர் நூல்கள் முதலிய இலக்கியத்துறை களிலும் மருத்துவம், ஆத்மீகம் எனும் துறைகளிலும் தன் எழுத்துக்களை பதித்த இவர் பதினாறுக்கும் குறையாத நூல்களை தமிழுக்குத் தந்துள்ளார்.

1947 இல் பட்டப்படிப்பு முன்னிலைக் கல்வி கற்கின்ற காலத்திலே வீரகேசரி யில் 'சஞ்சலமும் சந்தோஷமும்' என்ற சிறுகதை மூலமாக எழுத்துலகில் நுழைந்த இவர் எண்பதிற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதி யுள்ளார். இவரின் தொகுப்புக்களாக 'ஊர் நம்புமா?', 'கண்களுக்கு அப்பால்', 'நந்தியின் கதைகள்', 'தரிசனம்' என்பன வெளிவந்துள்ளன. இவற்றுள் 'நந்தியின் கதைகள்' தொகுப்பிற்கு 'லில்லி தெய்வசிகாமணி' பரிசு கிடைத்தமை குறிப்பிடத் தக்கது.

'மலைக்கொழுந்து', 'தங்கச்சியம்மா', 'நம்பிக்கைகள்' போன்ற நாவல்க ளையும் எழுதியுள்ளார். இவரது இந்நாவல்கள் இலங்கை தமிழ் வாசகர்களாலும் விமர்சகர்களாலும் மிகவும் காத்திரமான படைப்புக்களாக பேசப்படுகின்றன.

இவரது படைப்புக்களின் அடிநாத மாக மானுட நேசம் ஓங்கி ஒலித்துக் கொண்டே இருக்கும். தாம் பெற்ற மருத்துவத்துறை அனுபவங்களையும் மருத்துவமனைச் சூழல்களையும் நுட்பமாக உள்வாங்கி கவர்ச்சி ஆற்றல்களுடன் அற்புதமான இலக்கி யச் சிருஷ்டிகளாக்கி ஈழத்துத் தமிழிலக்கியத்திற்கு புதிய பரிமா ணத்தை ஏற்படுத்தினார்.

பெண்களுக்கும் மருத்துவம் கற்பிப்போருக்கும் பயனளிக்கும் மருத்துவ அறிவுரை சார்ந்த 'அன்புள்ள நந்தினி', 'அருமைத் தங்கைக்கு', 'நந்தினி உன் பிள்ளை', 'இதய நோய்களும் தடுப்பும்' முதலிய நூல்களையும் 'உங்களைப் பற்றி', 'தம்பி தங்கைக்கு' போன்ற சிறுவர் நூல்களையும் 'குரங்குகள்' எனும் நாடக நூலையும் தந்துள்ளார்.

சாயி பக்தர்களுக்கான ஆத்மீக நூல்களான 'சாயி அடியார்களுக்கு', 'ஸ்ரீ சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி – ஆசிரியர்க்கான கைந்நூல்', 'சாயியின் குரலும் வள்ளுவர் குறளும்' போன்றவற்றையும் எழுதியுள்ளார்.

மானிட நேயத்தையும் கலைத்து வத்தையும் ஆத்மாவாகக் கொண்ட இவரது படைப்புக்கள் தமிழ் இலக்கியத்தின் சிகரங்களாக அமைந்து, அரச உயர் விருதுகளை பல தடவைகள் பெற்றுள்ளன.

இவரது படைப்புக்களில் சமூக நடைமுறை பற்றிய கூர்மையான அவதானங்களும் செறிவான மொழிக் கையாள்கையும் சிறப்பாக இடம்பெற்று ள்ளன. எவ்வித சுற்றிவளைப்புக் களுமின்றி தேவையான சொற்களைத் தேர்ந்து, சிக்கனமாக சிறிய வசனங்களாக எழுதியதால் தமிழுக்கு வளமும் வனப்பும் கம்பீரமும் சேர்ப்பதாக இவரது படைப்புக்கள் விளங்குகின்றன.

நந்தியின் மணி விழாவையொட்டி வெளியிடப்பட்ட 'நந்தி- நோக்குகள் இருபத்தைந்து' எனும் நூலில் "நந்தியின் ஆக்கங்கள் இல்லாத ஈழத்து தமிழ் நாவலும் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையும் நிச்சியமாக வளக் குறைபாடு உடையதாகவே இருக்கும்" என கா.சிவத்தம்பி கூறியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.



# சொக்கன்
## (1930-2004)

1930 மே 02ஆம் திகதி யாழ். அச்சுவேலி ஆவரங்காலில் கந்தசாமிச் செட்டி சொக்கலிங்கம் எனும் சொக்கன் பிறந்து தமிழிலக்கிய உலகில் தனது எழுத்துக்களால் விசாலித்த படைப்பாளியாக விளங்கினார்.

இவர் சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, கட்டுரை, சமயம், வானொலிச் சித்திரங்கள், பாடநூல்கள், பாடநூல் வழிகாட்டிகள், மொழி பெயர்ப்புக்கள் எனப்பல துறைகளிலும் ஈடுபட்டதோடு 'ஈழமுரசு' பத்திரிகையின் ஆரம்ப காலத்துப் பத்திராதிபராகவும் திருக்குறளின் முதல் 700 குறள்களுக்கு உரையெழுதி உரையாசிரியராகவும் திகழ்கிறார்.

கற்றலில் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர் கலைமாணி, முதுகலைமாணி, இலக்கியக் கலாநிதி என்று தனது கல்விச் செழுமையை விரித்துக் கொண்ட இவருக்கு 'குகஸ்ரீ', 'பண்டிதர்', 'மூதறிஞர்', 'தமிழ் மாமணி', 'இலக்கியச் செம்மல்', 'வித்துவான்' எனும் பட்டங்களும் வந்து சேர்ந்தன.

ஆசிரியச் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இவர், மாணவர்களது நலன்கருதி தமிழ் இலக்கணம் தொடர்பான 'இலக்கணத் தெளிவு' இந்து சமயம்-இந்து நாகரிகம் தொடர்பாக 'இந்து நாகரிகம்-பாகம் I,II,III எனும் நூல்களையும் எழுதியுள்ளார்.

கட்டுரையியல் கைவரப் பெற்ற சொக்கன் அவர்கள் அதிகமான கட்டுரைகளை எழுதியுள்ளார். அவை பத்துத் தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன.

அவற்றுள் 'உரைநடைத் தெளிவு', 'படிப்பது எப்படி?', 'பாரதி பாடிய பராசக்தி', 'பைந்தமிழ் வளர்த்த பதின்மர்', 'நல்லை நகர் தந்த நாவலர்', 'சேர்.பொன்.இராமநாதன் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்', 'ஈழத்தில் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி', 'விபுலானந்த கவியமுதம்', 'இருபெரும் நெறிகள்', 'இலக்கியக் கருவூலம்' முதலியவை குறிப்பிடத் தக்கன. இவற்றுள் 'ஈழத்தில் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி' எனும் ஆய்வு நூலுக்காக 1978 இல் தேசிய சாகித்ய மண்டலப் பரிசினைப் பெற்றார்.

தன்னை ஒரு கல்வியாளராக வளர்த்துக் கொண்ட இவர் அரசினர் பாடநூல் வெளியீட்டு ஆலோசனைக் குழு உறுப்பினராக கடமையாற்றி தமிழ்-சைவம் ஆகிய இரு துறைகளுக்கு அளப்பரிய பங்காற்றியுள்ளார்.

1944 இல் தனது பதினான்காவது வயதில் 'தியாகம்' என்ற வீரகேசரிச் சிறுகதை மூலம் எழுத்துலகில் பிரவேசித்த இவர் சிறுகதைத் துறையில் தன்னை ஈடுபடுத்தி நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதிய எழுத்துச் சூரியராக திகழ்ந்தவர்.

'கடைசி ஆசை' எனும் சிறுகதை மின்னொளிச் சஞ்சிகையின் முதற் பரிசினை 1946 இலும் 'தபாற்காரச் சாமியார்' எனும் சிறுகதை வீரகேசரிச் சிறுகதைப் போட்டியில் 1966இல் முதற்பரிசினையும் பெற்றதோடு, 'கடல்' எனும் சிறுகதைத் தொகுதியும் 1972இல் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. இவரின் சிறுகதைகளுள் 'குட்டை நாய்', 'மாணிக்கம்', 'கடைசி ஆசை', 'விநோத நண்பன்', 'குரு', 'பிரியாவிடை', 'இருவரும் அழுதனர்',, 'உறவுமுறை', 'கடல்', 'கற்பரசி' முதலியவை சிறப்பிற்குரிய அற்புதமானவை.

1947 இல் 'கனவுக் கோயில்' எனும் வரலாற்றுச் சிறுகதையூடாக 'ஈழகேசரிக்கு அறிமுகமாகி இதில் 'தீர்ப்பு', 'கூனல்', 'பனித்துளி', 'மறுபிறவி' போன்ற பதின்மூன்று சிறுகதைகளை எழுதியுள்ள இவர் பழைய இலக்கியப் புலமையும் புதிய இலக்கிய ஈடுபாடும் ஒருங்கே கொண்ட படைப்பாளியாக விளங்கினார்.

அத்தோடு 'மறுமலர்ச்சி' இதழிலும் 'பொன்னுச்சி' எனும் கதையை எழுதினார். இது ஆரம்பகாலச் சிறுகதையாயினும் அக்கால கட்டத்தில் பலராலும் விதந்துரைக்கப் பட்டதாகும்.

சிறுகதைத் துறையில் பல பரிமாணங்களைப் படைத்த இவரது சிறுகதைத் தொகுப்பாக, 1998-2004 காலப்பகுதியில் எழுதப்பட்ட பத்து சிறுகதைகள் அடங்கிய 'கிழவரும் கிழவியும்' எனும் தொகுப்பும் அண்மை யில் வெளிவந்துள்ளது.

ஈழத்து நவீன நாவல் வரலாற்றில் சாதீயத்தினை கருவாகக் கொண்ட முதல் நாவலைப் படைத்த பெருமை சொக்கனுக்கே உரியதென்பர். அச் சிறப்பு நாவல் 'சீதா' என்பதாகும். இதுதவிர 'செல்லும் வழி இருட்டு', 'சலதி' என்பவைகளையும் 'மலர்ப்பலி', 'ஞானக்கவிஞர்', 'முகங்கள்' முதலிய குறுநாவல்களையும் எழுதியுள்ளார்.

சொக்கன் அவர்கள் 'வீரத்தாய்', 'சைவப் பெரியாரின் சால்பை உரைத்திடுவோம்', 'நசிகேதன்', 'நல்லூர் நான்மணிமாலை', 'முன்னீச்சர வடிவழகாம்பிகை அந்தாதி' , 'அப்பரின் அன்புள்ளம்', 'நெடும்பா -3', 'நல்லூர்க் கந்தன் திருப்புகழ்' எனும் கவிதை நூல்களையும் எழுதினார். இதில் 'நெடும்பா-3' எனும் கதைப்பாடற் தொகுதி 1986இல் இலங்கை இலக்கியப் பேரவையின் பாராட்டைப் பெற்றது.

இவருடைய கவிதையில் சைவமும் தமிழும் பொருளாயுள்ளன. கவிஞர் இ.முருகையன், "சொக்கன் நூலறி புலவர். ஆகையால் செய்யுள் வடிவம் பற்றிய முழு விளக்கமும் அவரிடம் உண்டு. யாப்பின் வழுக்களை சொக்கனின் ஆக்கங்களில் காண்பது அரிது. ஓசை வழுக்கள் மாத்திரமன்றி வாக்கிய வழுக்களையும் சொக்கனின் எழுத்துக்களில் காண முடியாது" என்பார்.

நாடகத் தமிழுக்கும் பல அரிய நூல்களை வழங்கியுள்ளார். 'சிலம்பு பிறந்தது', 'சிங்ககிரிக் காவலன்', 'தெய்வப்பாவை', 'மானத்தமிழ் மறவன்', 'மாருதப்புர வல்லி' என்பவை குறிப்பிடத் தக்கனவாகும்.

மொழிபெயர்ப்புத் துறையிலும் ஈடுபாடு உடைய இவர் மொழி பெயர்த்தவற்றுள் சத்யஜித்ரேயின் 'பகத்சிங்' குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு, ஆக்க இலக்கியப் படைப்பாளராக, பாடநூல் எழுத்தா ளராக, மேடைப் பேச்சாளராக, பதிப்பா சிரியராக, உரையாசிரியராக, ஆய்வா ளராக தடம் பதித்த இவரது எழுத்துக் களில் மேல்வரும் நான்கு சிறப்பம்சங் கள் இருப்பதாகக் குறிப்பிடுவர்.

* அவருடைய எழுத்து நடை இலக்கண வழுவின்றி எளிமை தெளிவு, வேகம் ஆகிய அம்சங்கள் பொருந்த அழகுற அமைந்திருக்கும்.

* உவமைகளைக் கையாளும்பொழுதும் கருத்துக்களை வெளியிடும் பொழுதும் எவ்விடத்திலும் எக்காரணம் பற்றியும் தரம் குறையாது உயர்ந்த படியிலேயே நின்று கொள்ளுதல்.

* கதை, கட்டுரை, கவிதை, நாவல் என எதை எழுதினாலும் அதன் மூலம் ஓர் உயர்ந்த இலட்சியங்களும் குறிக்கோள் களும் வெளிப்படும்.

* எத்துறையை எடுத்தாலும் அத் துறையை அணிசெய்யும் அவரது கைத் திறன் எல்லா துறைகளிலும் அவரு டைய படைப்புக்கள் உயர்தரமாகவே அமைந்திருக்கும்.

மரபு ரீதியாகத் தமிழ்கற்ற பண்டித வர்க்கத்தினரின் 'கட்டுப்பெட்டித்தன'த்தி லிருந்து மாறுபட்டு நவீன இலக்கியத் துறையிலும் ஈடுபாடு கொண்ட சொக்கன் மரபுக்கும் நவீனத்துவத் துக்கும் பாலமாகத் திகழ்ந்து இலங்கையர்கோன் காலத்திலும் எழுதி, பின்னர் கே.டானியல், எஸ்.பொ. போன்றோர் காலத்திலும் எழுதி பின் செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் காலத்திலும் எழுதி தலை முறை தாண்டிய எழுத்தாளராக திகழ்கிறார்.

❀❀❀



# நீலாவணன்
## (1931-1975)

1931-06-31 இல், கிழக்கிலங்கையில் பெரியநீலாவணையில் கேசகப்பிள்ளை – தங்கம்மா தம்பதியருக்கு மூத்த மகனாகப் பிறந்த இவரது இயற்பெயர் சின்னத்துரை. மருதமுனை அல்மனார் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர் ஆசிரியப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

கவிதை, சிறுகதை, சிறுகாவியம், கட்டுரை, இசைப்பாடல்கள், பா நாடகம், உருவகக்கதை, சிறுவர் பாடல்கள், உரைச்சித்திரம், விமர் சனம் முதலிய ஆக்க இலக்கியத் துறைகளிலும் தடம்பதித்த இவர் இதழியல் துறையிலும் பணி புரிந்ததோடு ஈழத்தின் நவீன கவிதை முன்னோடிகளில் முக்கியமானவராகவும் திகழ்கிறார்.

1948 இல் தினகரன் பாலர் கழகத்தில் வெளியான கவிதை மூலம் இலக்கிய உலகில் நுழைந்த இவர் கவிஞராகவே பெரிதும் இலக்கிய உலகில் அறியப்பட்டார். இலங்கையில் வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகை களில் இவரது ஆக்கங்கள் வெளி வந்தன.

தீவிர தமிழ்ப் பற்றுக்கொண்ட இவர் திராவிடக் கழக, திராவிட முன்னேற்றக் கழக சீர்திருத்தக் கருத்துக்களால் கவரப்பட்டு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தவராகக் காணப்பட்டார்.

இவரது முதலாவது கவிதையான 'ஓடிவருவதென்னேரமோ?' முதல், இறுதிக் கவிதையான 'பொய்ம்மை பொசுங்கிற்று' வரையான கவிதைக ளிலே தமிழுணர்வு, தமிழர் அரசியல், இயற்கை, காதல், மனோரதியக் கற்பனைகள், பழமை நோக்கு, ஆன்மீகம், மட்டக்களப்பு சமூக நடை முறைப் பிரச்சினைகள் என்பவற்றோடு புதுமை வேட்கையும் குறியீட்டுத் தன்மையும் அதிகம் வெளிப்பட்டன.

குறிப்பாக இவரின் காதல் கவிதைக ளிலே இடம்பெற்றுள்ள இயற்கை வர்ணனைகள் சிறப்பிடம் பெற்றுள்ளன. நிலவு, கடல், சூர்யோதயம் என்பன அடிக்கடி இவரது கவிதைகளைத் தரிசிக்கும்.

இயற்கை, காதல் குறித்த கவிதைகள் சங்கப்பாடல்களின் அமைப்பையும் பாரதிதாசனின் கவிதைப் பண்பையும் பெற்று விளங்கியதோடு பிற்காலக் கவிதைகளில் சமூகச் சீர்கேட்டை எள்ளி நகையாடும் பாரதியின் கவிதைத் தடமும் இவரது கவிதைகளில் இழையோடியிருந்தன.

ஆன்மீக நாட்டமும் குறியீட்டுப் பாங்கும் கொண்ட கவிதைகளில் 'ஓடமும் நானும்', 'புதிர்', 'பிழையாய் நினையாதீர்', 'எட்டாத ஒன்றாய்', 'பலூன்', 'துயில்', 'விளக்கு' முதலியனவும் குறிப்பிடத்தக்கன.

ஆரம்பத்தில் தமிழ் உணர்ச்சிப் பாடல்களை எழுதிய இவர் பின்பு உணர்வுச் செழுமையில் மனித உறவுகளைச் சித்திரிக்கும் பாடல்களை எழுதினார். ஈழத்தின் மஹாகவி, இ.முருகையன் முதலியோரின் கவிதை களில் காணப்படும் முரண் உத்திப் பண்பும் இவரது கவிதைகளில் குறிப்பாக 'உறவு' எனும் கவிதையில் காணப்படுகிறது.

மரபுவழிக் கவிதைகளில் பற்றும் பாசமும் அதிகம் கொண்ட இவர் தனது கவிதைகளில் பாமர மக்களின் பேச்சோசைக்கும் இடம்கொடுத்ததோடு விருத்தப்பா, வெண்பா, அகவல்பா, கலிவெண்பா, சிந்து இசைப்பா எனப் பல யாப்பு வகைகளையும் கையாண்டு ள்ளார். இவருடைய குறிப்பிட்ட சில கவிதைகளை 'ஒத்திகை' எனும் பெயரில் இவரின் மகன் எழில்வேந்தன் நூலாக வெளியிட்டுள்ளார்.

1960களில் கல்முனையில் ஒரு கலை-இலக்கியப் பண்ணை உருவாகி நாடகத்துறையில் ஈடுபட்டது. அவ் வகையில் அவர் எழுதிய 'மனக்கண்',

'மழைக்கை', 'சிலம்பு' முதலிய பா நாடகங்களை எழுதியுள்ளார்.

சிறுகதைத் துறையிலும் ஓரளவு கவனிக்கத் தகுந்த படைப்புக்களைத் தந்தவராவார். இவரது சிறுகதை களைக் கொண்ட 'ஒட்டுறவு' எனும் சிறுகதைத் தொகுப்பினை இவரது மகன் எழில்வேந்தன் அண்மையில் வெளியிட்டு உள்ளார். இத்தொகுதியில் 'ஒட்டுறவு', 'பட்டமரம்', 'சபலம்', 'பிராயச்சித்தம்' தெளிவு', 'நெருஞ்சி முள்', 'நிராசை', 'நாணயம்', 'ஆறாவது குழந்தை', 'முத்துலிங்கம் மேலே போகிறான்' முதலிய பத்துச் சிறுகதைகளும் பதினைந்து உருவகக் கதைகளும் ஆறு விருத்தாந்த சித்திரங்களும் இரண்டு குறும்புக் கதை களும் இடம் பெற்றுள்ளன.

இவர், ஆரம்பத்தில் எழுதிய சிறுகதைகள் தி.மு.க. எழுத்தாளர் சாயலில் அமைந்ததனால் பெரிதும் கவனம் பெறவில்லை என்பர். பின்னர் 1970 களில் எஸ்.பொ., இலங்கையர் கோன், வ.அ.இராசரத்தினம் போன்றோ ருடன் ஏற்பட்ட நட்பின் விளைவாய் நவீன சிறுகதைத் துறையில் இவருக்கு பரிச்சயம் ஏற்பட்டதனால் அதன்பின்னர் எழுதிய 'ஒட்டுறவு' எனும் சிறுகதை ஈழத்தில் வெளிவந்த மிகச் சிறந்த முப்பது சிறுகதைகளுள் ஒன்றாக அமையக் கூடியதாக விளங்குகிறது என்பர்.

இவர் மூன்று சிறுகாவியங்களையும் தமிழுக்குத் தந்துள்ளார். வெண்பா யாப்பில் அமைந்த 'பட்டமரம்', இவரது கவிதா முதிர்வை வெளிப்படுத்தும் 'வேளாண்மை', தினகரனில் நடைபெற்ற இலக்கியப் பரிசோதனைக் களத்திற் கென எழுதப் பட்ட 'வழி' என்பவை அவையாகும்.

இவற்றுள், 'வழி' எனும் குறுங் காவியத்துடன் 'பாவம் வாத்தியார்', 'உறவு', 'வெளுத்துக்கட்டு', 'பட்ட மரம்', 'மட்டக்களப்பு மாநகர்' முதலிய நல்ல கவிதைகளையும் உள்ளடக்கிய 'வழி' எனும் தொகுப்பு 1976 இல் அவர் மனைவி அழகேஸ்வரியால் வெளியிடப் பட்டது.

1967 இல் 'பாடும் மீன்' எனும் கலை, இலக்கிய மாத இதழை வெளியிட்டார் அதில் இரண்டு விருத்தாந்த சித்திரங்களை எழுதி னார்.

அண்மையில் வெளியிடப்பட்ட 'ஒட்டுறவு' எனும் கதைத் தொகுதியில் ஆறு விருத்தாந்த சித்திரங்கள் இடம் பெற்றுள்ளன.

கட்டுரையாளராகவும் தன்னை இலக்கியத்தில் ஈடுபடுத்திய இவர் 'இவர்தான் இலங்கையர்கோன்', 'நானும் இலங்கையர் கோனும்', 'என் கவிதை', 'குறும்பா தமிழுக்குப் புதிதா?', 'கரவெட்டி தந்த கவிஞர்.க.வீ. ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் இருட்டடிக்கப் பட்டது ஏன்?' போன்ற கட்டுரைகளை எழுதியதன் மூலம் விவரணக் கட்டுரைகள், கண்டனக் கட்டுரைகள் போன்றவற்றை சுவாரசியமாக எழுது வதும் இவருக்கு கைவரும் என்பதை நிரூபிக்கின்றன.

இவர் 'நீலாவணன்' எனும் புனை பெயரில் மட்டுமன்றி 'நீலா. சின்னத்துரை', 'அம்மாச்சி ஆறுமுகம்', 'கொழுவு துரட்டி', 'வேதாந்தி', 'சங்கு சக்கரன்' எனும் புனைபெயர்களிலும் தனது படைப்புக்களை உலவ விட்டவர்.

கல்முனையில் தனது காலத்தி லேயே ஓர் எழுத்தாளர் பரம்பரையை உருவாக்கினார். அதில் எம்.ஏ.நு.'.மான், மருதூர்க்கனி, மருதூர்க்கொத்தன், அன்பு முகைதீன், மு.சடாட்சரன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மண்வளமும் மட்டக்களப்புக் கிராமிய வழக்காற்றுச் சொற்களும் கிராமிய சமய சடங்கு சம்பிரதாயங்க ளும் சொத்துடைமையின் அடிப்படை யிலான சமூக உறவுகளும் முரண்பாடு களும் என்று மட்டக்களப்புத் தமிழர் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் காலத்தின் கண்ணாடியாய் இவரது படைப்புக்கள் விளங்குகின்றன.

❀❀❀



# சில்லையூர் செல்வராசன் (1933-1995)

1933, ஜனவரி 25 ஆம் திகதி யாழ். சில்லாலை (சில்லையூர்) எனும் ஊரில் சூசைப்பிள்ளை அன்னம்மாள் தம்பதியினருக்கு புதல்வராக பிறந்தவரே மரியதாஸ் எனும் இயற்பெயருடைய சில்லையூரான் ஆவார்.

சிறுவயதிலேயே கல்வியில் திறமை சாலியாக விளங்கிய இவர் சில்லாலை சனசமூக நிலையம் வழங்கிய புலமைப் பரிசில் மூலம் ஊர்காவற்றுறை செனட். அந்தோனியார் கல்லூரியில் கல்வி பயின்றவர்.

கவிதை, விமர்சனம், புனைகதை, கட்டுரை, நாடகம், திரைப்படம், மொழி பெயர்ப்பு, பத்திரிகை முதலிய துறைகளில் தன் ஆளுமையை வெளிக் காட்டி 'பல்கலை வேந்த'ராக விளங்கினார்.

பதினாறு வயதிலேயே கவிதை எழுத முற்பட்ட இவர் தனது பதினைந்தாவது வயதில் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து பதினாறு வயதில் அரசியலிலும் புகுந்தார். கல்விக் காலத்திலேயே 'சுதந்திரன்' பத்திரிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் 'சதங்கை நாதம்' எனும் சிறுகதையை எழுதி முதற்பரிசினைப் பெற்றுக் கொண்டார்.

'சுதந்திரன்' பத்திரிகையின் உதவி ஆசிரியர்களுள் ஒருவராக பணிபுரிந்த இவர் 'வீரகேசரி', 'தினகரன்' என்பவற்றிலும் பணிபுரிந்து, அக்காலகட்டத்தில் இப்பத்திரிகைகளில் இந்திய எழுத்தாளர்களே எழுதி வந்த மரபை நெகிழ்த்தி கைலாசபதி, கா.சிவத்தம்பி, இ.முருகையன், மஹாகவி, கே.டானியல், டொமினிக் ஜீவா, எஸ்.பொ., வ.அ.இராசரத்தினம் போன்ற முற்போக்கு சிந்தனையாளர் பலருக்கும் எழுத்துக் களம் அமைத்துக் கொடுத்தார்.

'தான்தோன்றிக் கவிராயர்' எனும் புனை பெயரில் கவிதைகளை இயற்றிய இவர் கவியரங்குக் கவிதைகளுக்கு பிரசித்தி பெற்றிருந்தார். அவரது கவியரங்கு இடம்பெறுகின்றதென்றால் அவரது அங்கத-நையாண்டிக் கவிதைகளை கேட்டு ரசிப்பதற்கென ஒரு சுவைஞர் பட்டாளம் இருக்குமென்பர்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கிய ஆரம்பகால கர்த்தாக்களில் ஒருவரான இவர், தனது தீவிர முற்போக்கு-மார்க்சிச சிந்தனை கொண்ட கவிதைகள் மூலம் இலங்கையில் 'முற்போக்கு இலக்கியம்' வளர்வதற்கு பெரிதும் துணைநின்றார். மார்க்சிச சித்தாந்தத்தினால் மட்டுமே ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கலாம் என்ற கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட இவர் பிற்போக்குவாதிகளின் கருத்துக்களை முறியடிப்பதிலும் அன்றைய யாழ்ப்பாணச் சமுதாயத்தில் நிலவி வந்த சாதிக் கொடுமையை எதிர்ப்பதிலும் முன்னின்று செயற்பட்டார்.

'ஊரடங்குப் பாடல்கள்', 'தலைவர்கள் வாழ்க மாதோ', 'சில்லையூர் செல்வராசன் கவிதைகள்: தொகுதி-1' என்பவற்றில் மக்கள் நலம், தொழிலாளர் உரிமை, சாதிக் கொடுமை, தமிழரின் அறியாமை போன்றவற்றை கருவாகக் கொண்ட கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

பண்டிதர்களின் பிற்போக்குத் தனத்தையும் சாகித்ய மண்டலப் பரிசினை பண்டித வர்க்கத்தினர் தம் வயப் படுத்தியிருந்தமையையும் சாடிப் 'பரிசு கெட்டம்மானை' போன்ற சிலேடைக் கவிதைகளை இயற்றி பாமர மக்களைப் பற்றி எழுதும்போது, அம்மக்களின் மொழியை உபயோகிக்கும் போதுதான் யதார்த்தம் வெளிப்படும் என்ற கொள்கையுடன் கவித்துவமும் சிறந்த சொல்லாட்சிகளும் கொண்ட பாரதியின் சாயலில் அமைந்த கவிதைகளை இயற்றி பாரதி பரம்பரையில் முக்கியமான ஒருவராகவும் திகழ்கிறார்.

பண்டிதத் தமிழ் புரையோடியிருந்த காலகட்டத்தில் பாமர மக்களின் பேச்சு மொழியினை கவிதைகளில் பயன்படுத்துவதால் தமிழின் தூய்மை

கெட்டுவிடும் என்ற பண்டிதர்களின் மனோபாவத்தை மறுத்து 'இழிசனர் வழக்கு' எனும் கவிதை நாடகத்தை தினகரனில் எழுதிய இவர் பாமர மக்களது பேச்சோசையினையும் தனது கவிதைகளில் கையாண்டுள்ளார்.

நாடகத்துறையிலும் தன்னுடைய ஆளுமைகளை வெளிப்படுத்தியுள்ள இவர் தொலைக்காட்சியில் தமிழ், ஆங்கில, சிங்கள நாடகங்களில் நடித்ததோடு வானொலி நாடகங்களை எழுதியும் நடித்தும் உள்ளார்.

நாடகத்துறை மூலம் திரைப்படத் துறையில் காலடி வைத்த இவர் 27 விவரண குறுந்திரைப் படங்கள் எழுதி படம் பிடித்து அதில் வெற்றியும் கண்டதோடு ஐந்துக்கும் மேற்பட் திரைப்படங்களிலும் கதாநாயகனாக நடித்ததோடு 'தணியாத தாகம்' எனும் திரைப்படச் சுவடி ஒன்றையும் வெளியிட்டார். நாடகம், திரைப்படம் போன்ற துறைகளில் இவர் ஆற்றிய பணியினை கௌரவித்து ஜப்பானிய அரசு இவருக்கு 'புங்கா' விருதினை அளித்தது.

1964 காலப்பகுதியில் தினகரனில் கனக-செந்திநாதன் எழுதிய ஈழத்து இலக்கிய வளர்ச்சி எனும் கட்டுரை நூலுக்கு எதிராக 'கனக-செந்திநாதன் சேட்டைக்குச் சாட்டை' என்ற பெயரில் தினகரனில் கட்டுரைத் தொடரை எழுதி 'தமிழின் முதல் நாவல் ஈழத்து நாவலே' என்ற வரலாற்று உண்மையை வெளிப்படுத்தி அது தொடர்பாக 'ஈழத்து தமிழ்நாவல் வளர்ச்சி' எனும் ஆய்வு நூலையும் எழுதியுள்ளார்.

மும்பாயில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாக கலந்துகொண்ட இவரது கவிதை ஆசியப் பெருவிழாவில் உலகப் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்ட சிறப்புக்குரியது.

பலதுறைகளிலும் ஈடுபட்ட இவரைப் பாராட்டி மக்கள் இவருக்கு 'பல்கலை வேந்தர்' எனும் பட்டம் சூட்டி மகிழ்ந்தனர். இவ்வாறு மக்கள் கவிஞராகத் திகழும் இவர் ஈழத்து இலக்கியவுலகில் முதன்மை யானவராகத் திகழ்கிறார்.

❀❀❀



# மு.தளையசிங்கம் (1935-1973)

1935 இல் யாழ். புங்குடு தீவில் பிறந்த முருகேசு தளையசிங்கம் அவர்கள் ஈழத்து தமிழிலக்கியப் பரப்பில் தனது படைப்புக்கள் மூலம் மிக முக்கியமானதொரு ஆளுமையாக விளங்குகிறார்.

1957 இல் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த காலகட்டத்தில் 'சுதந்திரன்' பத்திரிகையில் 'தியாகம்' என்ற சிறுகதை மூலம் எழுத்துலகில் நுழைந்த இவர் சிறுகதை மட்டுமன்றி நாவல், கவிதை, விமர்சனம்-திறனாய்வு, பத்திரிகை போன்ற படைப்பிலக்கியத் துறைகளில் ஈடுபட்டார்.

ஆசிரியர் சேவையில் ஈடுபட்டிருந்த இவர் இலக்கியப் பணிகளோடு 'சர்வமத சங்கம்', 'பூரண சர்வோதய சங்கம்' ஆகியவற்றை ஏற்படுத்தி தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காக தனது இறுதி மூச்சுவரை பாடுபட்டு, ஈழத்துத் தமிழிலக்கியத்தின் முற்போக்குச் சிந்தனை கொண்ட படைப்பாளிகளுள் தலை சிறந்து விளங்குகிறார்.

1956 களில் எழுத ஆரம்பித்த இவர் ஈழகேசரி, கலைச்செல்வி, செய்தி போன்ற இதழ்களில் எழுதியுள்ளார். இவரது சிறுகதைகளுள் 'அவர்க்கும் உண்டு இதயம்', 'தொழுகை', 'கோட்டை', 'புது யுகம் பிறக்கிறது', 'அருளி மொட்டு', 'பெப்ரவரி-4' போன்றவை மிகவும் குறிப்பிடத்தகுந்த கதைகளாகும். இவை 1956 இற்குப் பின்னர் வந்த பரம்பரைக்குரிய சிறந்த கதைகளில் சில என்று எடுக்கப்பட வேண்டியவை எனவும் கருதப் படுகின்றன. இவரின் சிறுகதைகள் 'புதுயுகம் பிறக்கிறது' எனும் பெயரில் தொகுப்பாக வெளிவந்துள்ளது.

சிறுகதைத் துறையில் மட்டுமன்றி நாவல் படைப்பதிலும் தனித்துவம் மிக்கவராக விளங்கும் இவரது நாவல்களுள் 1960 இல் எழுதப்பட்ட,

'ஒரு தனிவீடு' எனும் தமிழ்த் தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட நாவலும் 1985 இல் வெளியான 'கலைஞனின் தாகம்', 'ஒளி பிறந்தது' போன்றவையும் குறிப்பிடத்தக்கன.

எழுத்து வேறு செயல் வேறு என்றில்லாமல் சமூகப் போராட்டங் களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திய இவர் அப்போராட்டங்க ளுக்காகவே தனது படைப்பாற்றலையும் பயன்படுத்தினார். அவ்விதத்தில் 'மெய்யுள்' எனும் புதிய கவிதை வடிவத்தில் பொதுவுடைமையை போற்றியும் சமூகக் கொடுமைகளைத் தூற்றியும் 1972இல் 'மெய்யுள்' எனும் பெயரிலேயே கவிதை நூல் ஒன்றினை வெளியிட்டார்.

சிறுகதை, நாவல், கவிதை போன்ற துறைகளில் எழுதியிருந்தாலும் இவர் பெரிதாகவே பேசப்படுவது விமர்சனத் துறை மூலமாகவேயாகும். அவ் வகையில் ஈழத்துத் தமிழிலக்கிய விமர்சனத் துறையில் 'பிரபஞ்ச யதார்த்தவாதம்' எனும் கொள்கையை முன்வைத்து தனது தீர்க்கமான விமர்சனங்களை முன்வைத்த இவர் அக்காலத்தில் முற்போக்கு, நற்போக்கு இரண்டினது குறைகளையும் எடுத்துக் காட்டும் கட்டுரைகளையும் எழுதினார்.

இவரது விமர்சனக் கட்டுரைகளுள் தினகரனில் தொடராக வெளிவந்து பெரும் சர்ச்சையை எழுப்பிய 'விமர்சன விக்கிரகங்கள்', 1963 இல் எழுதிய 'ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி- சில அவசரக் குறிப்புக்கள்', 'போர்ப்பறை', 'முற்போக்கு இலக்கியம்', 'மூன்றாம் பக்கம்' போன்றவை விமர்சன உலகின் மைல் கற்களாக இன்றுவரை திகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இதில் 'விமர்சன விக்கிரகங்கள்' என்ற கட்டுரைத்தொடர் மூலம் ஈழத்து இலக்கிய விமர்சகர்களையே ஆக்க ரீதியில் விமர்சித்த எழுத்தாளனாய் விமர்சனத் துறையில் இறங்கிய இவர் 'மூன்றாம் பக்கம்', 'முற்போக்கு இலக்கியம்' போன்ற விமர்சனங்கள் மூலம் தனக்கெனத் தனி முத்திரை பதித்து தனக்கே உரிய நடுநிலை நோக்கில் எல்லாப் போக்குகளுக்கு முரிய நல்லதைக் கறந்தும் கெட்டதைக் கண்டித்தும் ஒரு மூன்றாம் பக்கப் போக்கை உருவாக்கி 'ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி' யில் அதன் உச்சத்தையே தொட்டுவிடுகிறார்.

பேருக்கும் புகழுக்கும் எழுது பவர்கள் மத்தியில் தான் கொண்ட கொள்கைக்காக எழுதிய இவர், தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற் றத்திற்காகவும் பாடுபட்டார். அதன் ஒரு கட்டமாய் 'சத்தியம்' எனும் பத்திரிகையை வெளியிட்டார்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்னீர்க் கிணறுகளில் இடம் அளிக்கும்படி கேட்டு போராட்டம் நடாத்தியபோது பொலிஸாரால் தாக்கப்பட்டு – அதன் போது ஏற்பட்ட பக்க விளைவுகளினால் 1973 இல் தான் மரணிக்கும் வரை நல்லதொரு மனிதனாகவும் சமரசம் செய்து கொள்ளாத நடுநிலை தவறாத விமர்சகராகவும் வாழ்ந்தார்.

இவரைப் பற்றி தமிழகத்தின் புகழ்பூத்த படைப்பாளிகளில் ஒருவரான அமரர். சுந்தரராமசாமி அவர்கள்,

> "இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தற்கான சாயல்களை இவரைப் போல் முழு வீச்சோடு வெளிப்படுத்திய ஆளுமைகள் நம்மிடையே வேறு உள்ளனவா? இந்த நூற்றாண்டின் (20 ஆம் நூற்றாண்டு) முதற் பகுதியில் இரண்டு பெயர்கள் கிடைக்கின்றன. ஒருவர் பாரதி, மற்றொருவர் புதுமைப்பித்தன். பாரதி தாழ்ந்து போனமைக்கு துக்கித்து மேலான ஒன்றை எழுப்ப முயன்றார். புதுமைப்பித்தன் தாழ்ந்து போனதை வெட்ட வெளிச்சமாக்கினார். இந்த வரிசையில் மூன்றாவதாக வருபவர் தளையசிங்கம். பாரதியின் கருத்து லகத்தை விடவும் தளையசிங்கத்தின் கருத்துலகம் முழுமையானது. மற்றொரு விதத்தில் சொன்னால், பாரதியின் சிந்தனையை இவர் தம் காலத்துக்குக் கொண்டு வந்து இடைக்கால சரித்திரத்துக்கும் எதிர்வினை தந்து இடைவெளிகளை அடைத்து முழுமைப் படுத்த முயன்றார்"

என்று, தமிழிலக்கியத்தில் இவரது ஆளுமையினை கோடிட்டுக் காட்டியதனூடாக நவீன தமிழ் இலக்கியப் பரப்பில் இவருக்குள்ள இடத்தினை தெரிந்து கொள்ளலாம்.

❀❀❀

"சமகாலப் படைப்பாளிகளின் வாழ்க்கை பற்றியோ அவர்களின் முகங்கள் பற்றியோ அறியாமலும் அவர்களது நூல்களை வாசிக்காமலும் (சங்க இலக்கிய நூல்களைத் தொட்டுப் பாராமலும்) சிறந்த பெறுபேற்றினை அடைந்து விடுகின்ற இன்றைய உயர்கல்விச் சூழலில், இந்நூலாசிரியர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் படைப்பாளிகளின் புகைப்படங்களைத் தேடி வெளியிட்டிருப்பதும் அவர்களது காலத்தைக் குறிப்பிட்டிருப்பதும் பாராட்டிற்குரிய விடயங்கள் ஆகின்றன!"

- கலாநிதி செ.யோகராசா -